உ

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு உக	திருவள்ளுவர் ஆண்டு கசுஅசு, ஆனி சூலை, 1955.	பரல் கக

சிவஞானம் பிள்ளை அவர்கள்

[மாதவச் சிவஞானமுனிவர் மரபினர்]

ஊர்

சந்தனப் பொதியிலும் பைந்தமிழ்த் தென்றலும் முந்துறு பொருநையும முத்தமிழ் முழக்கமும் எந்நாளும் திகழும் திருநெல்வேலித் திருக்குற்றாலத்துக்கு அண்மையிலுள்ள தக்க வேளாண்குலம் மிக்கிருக்கும் விக்கிரமசிங்கபுரம் ஆகும். இத்திருவூர் பாவநாசத் திருவூருக்கும் பக்கத்ததாகும். இவ்வூரின்கண் ஏறத்தாழ நூற்றெழுபத்துமூன்று ஆண்டுகளுக்கு முன் அருளால் தோன்றிய செந்நெறிச் செல்வர் சிவஞான முனிவரனார் ஆவர். இத்திருவினர் கருவிலே திருவருள் கைவந்த உருவினர். உலகுய்யத் தோன்றியருளிய நிலையினர். மிக இளமைப் பருவத்தே உளமார் துறவு உற்றவர். தென் தமிழும் வடமொழியும் முன்னைத் தொடர்பால் நிலைகண்டுணர்த்தும் திறலினர். மெய்கண்டாரருளிய செந்தமிழ்ச் சிவஞானபோத முழுமுதற் சித்தாந்த நூற்குச் சிற்றுரையும பேருரையும் யாத்தருளிய முற்றுணர் பேராசிரியர். சித்தாந்தம், தூய செந்தமிழர் தம் சிறந்த தெய்வக் கொள்கையினை வலியுறுத்திவரும் தனிப் பெருமை நெறியாகும். இந்நெறியின் மெய்ம்மையினை விரித்து விளக்கி என்றும் நின்று அரண்செய்வது முனிவரனார் பேருரையே ஆகும். இவர்கள் நாவன்மையும் பாவன்மையும பயிற்றும் மாண்பும தவ அருளால்பெற்ற சிவகுரவர். உலகுய்தற்பொருட்டு இலக்கண இலக்கிய நூற்களும், அளவை சமயம் முதலியன விளக்கும் நூல்களும், வரிப்பாட்டு நூற்களும் ஆக முப்பது நூற்களுக்குமேல் அருளியுள்ளார்கள். அத்தகைத தமிழ் முனிவரனார் திருக்கோவில் இன்றும் ஆங்குத் திகழ்கின்றது.

மரபு

நம் சிவஞான முனிவரனார் தோன்றியருளிய திருக்குலத்து நேர்வழி முறையாகக் கொல்லம் ௧௦௫௫-ஆம் ஆண்டு வைகாசித் திங்கள், ஐந்தாம் நாள் தோன்றியவர்கள் நம் சிவஞானம் பிள்ளையவர்கள் ஆவர். இவர்கள் திருமுகமும் நம் முனிவரனார் அருள் முகமும் வடிவ ஒற்றுமையாகத் தோன்றுதலொன்றே மரபுண்மை நாட்டும் வாய்மையாகும். இவர்தம் தந்தையார் திருப்பெயர் அனந்தகிருட்டிணக் கவிராயர் என்ப. தாயார் முத்தம்மை.

கல்வி

இளமையிலேயே திருக்குறள் சித்தாந்தத் தொன்னூல்களிடத்து தனிபெருங் காதற் கருத்தினர் அவ்வுண்மை பின் தங்கள் வாழ்நாள் முழுவதும் அந்நூற்களை இடையறாது ஓதியும் ஓதுவித்தும், ஓதும் ஒண்மையர்க்கு ஒல்லும்வகை உதவி ஊக்குவித்தும் வரும்பணியே சிவப்பணியாகக் கைக்கொண்டொழுகிய தவவொழுக்கத்தால் நன்கு புலப்பட்டது. செந்தமிழும் ஆங்கிலமும் முறையாகக் கற்றுப் புலமை நிரம்பினர். ஆங்கிலத்தில் இளம்புலவர் (F. A.) என்னும் எழிற்பட்டம் எய்தினர். சட்டக்கலையிலும் தேறி வழக்கறிஞர் ஆயினர்.

வழக்கறிஞர்

அம்பாசமுத்திர அணிநகர் உறைந்து அறப்பயக்கும் வழக்கறிஞர் தம் வாய்மைத தொழிலை மேற்கொண்டனர். உடல் நோய் நீக்கி உயிர்க்கு உதவும மருத்துவத் தொழில்போன்று வழக்கறிஞர் தொழிலும் வண்மையுடையதே யாகும்; என்னை? உயிர்க்கு ஏற்படும் உடைமைக்கேடு உடலூறு இவற்றான் வரும் துன்பங்களைச் சட்டமுறையின் நீக்குவித்து இன்பமொடு இனிது வாழத் துணை புரிதலானென்க இத்தொழிற்கண் பேரும் புகழும் பெருகப் பெற்றுத் திகழ்ந்தனர். வாய்மை வழக்கல்லாதவற்றைக் கடிந்து சேய்மையில் நீக்குவது இவர்தம் பண்பு. வாய்மை வழக்கினைத் தூய்மைசெய்து துணிவொடு நிலைநாட்டி வெற்றி காண்பது இவர்தம் வினைத்திறன் இம்முறையால் முறை மன்றத்தாரும, வழக்காளர்களும், உலகோரும், இவர்கள்பால் நன்மதிப்பு ஒருங்கு பூண்பாராயினர். அதனால் செம்மை நெறியால் மும்மைச் செல்வமும் எளிதிற் சேர்வவாயின. அச்செல்வம் தீதின்றிவந்த பொருளாதலின், அறனீன்றது; அவ்வழி இன்பமும ஈன்றது. உறவும் நண்பும் சூழ்ந்தன.

வாழ்க்கை

புண்ணியப் பேற்றால் நண்ணிய வாழ்க்கைத் துணைவியார் மனைத்தக்க மாண்புடையார். சோர்விலாப் பெண்தகையார்.

துணைவரை இணையிலாத் துணையாய் இடைவிடாது காக்கும் எழிலினர். இனிய மருத்துவர்போன்று யாக்கையினை நோய்க்கு இடங்கொடாது காத்து ஊக்குவித்து உற்றுழியுதவிய ஒண்மையர். இவ்வுண்மை அவர்கள் வாய்மொழியாகப் புகன்று வருந்திய வருத்தமொழி பொருத்தமுறக் காட்டுவதாகும்; என்னை? 'இல்லத்துணையார் முன்னை செல்ல நேராது உடனிருப்பளேல் என்நோக்குப் பறிபோகாது ஆக்கமொடு நிலவும்' என்பதேயாம். பின்னாட்களில் தன்னை வற்புறுத்தித் தவிராது எண்ணெய் முழுக்கு முழுகச் செய்திருப்பரேல் இந்நிலை நேர்ந்திராதெனவும் கூறி, இரங்கினர். இது வள்ளுவப் பெருந்தகையார் 'அடிசிற்கினியாளே' என்று அகமுறக்கூறிப் பரிவுற்றதனை நினைவுறுத்துவதாகும். துணைவியார் பெயர் சிதம்பரத்தம்மாள்.

திருவருட்டுணையால் விருந்தும் ஈகையும், வேளாண் வாழ்க்கையும், தாளாண்மையும், அடியவர்ப் பேணலும், அரனை மறவாமையும், ஒக்கல் போற்றலும், மக்கட் செல்வமும், ஆன்றோர் நட்பும், ஊருடன் வாழ்தலும் ஒருங்கு எய்திச் சிறந்து வாழ்ந்தனர். திருக்குறளே இவர்தமக்கு உருக்கமுள்ள வழிகாட்டியாகும். எப்பொழுதும் உடனிருக்கும் உயர்ந்த கருவூலமாகும். ஒருகால் நீராவி வண்டியிற் செல்லும்போது வெள்ளைப் பாதிரித் துரைமகனாருடன் செல்ல நேர்ந்ததாம். அப்பொழுது அத் துரைமகனார் தங்கள் கிறித்துபெருமான் உலகுக்குணர்த்திய உயர்ந்த அறவுரைபோன்று எவரும் யாண்டும் புகன்றிலர் எனப் பெருமிதம் கொண்டனராம். அஃதென்னை எனின்? "ஒருவன் உன் வலக்கன்னத்திலடித்தால் உனது இடக் கன்னத்தையும் அவனுக்குத் திருப்பிக்கொடு" என்பதே. இதனை அன்புடன் கேட்டுக்கொண்டிருந்த நம் பிள்ளையவர்கள், அகமகிழ்வுடன் எங்கள் திருவள்ளுவ நாயனார், 'துன்பம் செய்வார்க்கும் இன்பம் செய்' என்றருளினர். அது "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண, நன்னயம் செய்துவிடல்" என்னும் திருக்குறளாகும் எனத் திருக்குறளை எடுத்துக்காட்டி விளக்கினர். அந்நாள் தொட்டு அத்துரைமகனார் நண்பராய்த் திருக்குறளைக் கற்றுத் தெளிந்து மேல்நாடு சென்றும் நண்புமுறை எழுத்துக்கள் விடுத்துக்கொண்டே யிருந்தனர் என்ப.

இச்சீரிய தொண்டுமுறை பிள்ளையவர்களின் திருமகனார் திருமணத்தின்போது புறக்கொடையாய்ப் பெரும்பாலும் உடலோடமைவதாயுள்ள சந்தனம் பன்னீர் வெற்றிலை பாக்கு பூ பழம் முதலன வழங்குவதுடன் உயிருடன் உறைவதாயுள்ள உணர்வு நூற்கொடையும் வழங்கி வழிகாட்டினர். அந்நூல், எது? 'திருக்குறள் அறத்துப்பால் இல்லறஇயல்

உரையுடன்' சேர்ந்த அணிநூல் ஆகும். மேலும் நம் சீரிய மகளிர் வள்ளுவர் வழிநின்றொழுகி வாழ்தற்பொருட்டு, நம் இல்லங்களில் அவர்கள் கண்ணில் காணும்படி பெரிய எழுத்தில் இன்றியமையாத சில திருக்குறளை அழகுறப் பொறித்துவைத்தல் வேண்டும் என வலியுறுத்துவர். அவ்வாறு தாங்கள் செய்த தாகவும் கூறுவர். அவற்றுட் சில: 'அற்றாரழி பசிதீர்த்தல்' 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்' 'பழியஞ்சிப் பாத்தூண்' முதலிய முழுத்திருக்குறளுமேயாம்.

பொதுத்தொண்டு

திருநெல்வேலி 'வேளாளர் கல்விச் சங்கத்தின்' தூணையஉறுதிச் சுற்றமாய், தலைமைப் பணியராய், உண்மை உழைப்பினராய், ஓவா துழைத்து உயர்த்திய ஒருபெரு முதன்மையர். அச் சங்கத்தின் வைப்புப் பொருள் உரிமை நிலையம் முதலியன அமைத்தற் பொருட்டு உள் நாட்டினீட்டிய உதவித்தொகையுடன் கடல்கடந்து இலங்கை முதலிய இடங்களிலும் வந்து பெரும்பொருள் திரட்டி நல்கினர். அப்பொழுது அவர் தம் நீண்டு பரந்த முகப்பொலிவும், புன்முறுவலும், நாவன்மையும், அன்பிணைப்பும் யாவரையும் ஒருங்கீர்த்து உதவச் செய்தன. இதனைக் கண்ணுறுவார் இவர்தம் பண்பாட்டொழுக்கம் இத்தகைய என இசைப்பர். அவை தருக்கின்மையும், உயர்ந்தார்ப்பணிதலும், ஒத்தார்க்குறவும், உயர்வார்க்கு நன்மதிப்பும் தக்கவாறளித்து உலகத்தோடொட்ட வொழுகலின என்பதே. இம்முறையால் அவர்கள் பல்லாண்டுகளாக அம்பாசமுத்திரம் வட்டக் குழுவாட்சியின் (Taluk Board) தலைவராகவும், சேரன்மாதேவி வட்டக் குழுவாட்சித் துணைத்தலைவராகவும், திருநெல்வேலி மாவட்டக் குழுவாட்சி உறுப்பினராகவும் உறைந்து நன்மதிப்புடன் தொண்டாற்றி யுள்ளனர். அதுவேபோல் அம்பாசமுத்திரம் தீர்த்தபதி உயர்நிலைப் பள்ளியின் செயலராகவும் தலைவராகவும் இருந்து அப்பள்ளியின் முன்னேற்றத்துக்கான பயனார் பலபணி புரிந்துள்ளனர்.

சிவத்தொண்டு

திருக்குறளின் காதல் போன்று திருமுறை பன்னிரண்டும் சித்தாந்த நூல் பதினான்கும் ஆகிய மெய்ந்நூற்கண் மெய்க்காதல்கொண்டு ஒழுகியவர். திருக்கோவில் முன்னாள் ஆட்சிக் குழுவினருள் ஒருவராயிருந்து அறப்பணி புரிந்தவர். சித்தாந்த சைவ உண்மை நாடெங்கும் பரவவேண்டும் என்னும் பெருங்காதல் கொண்டவர். சித்தாந்த சைவத் தமிழ் மந்திரமாம் 'சிவயநம' என்னும் திருவைந்தெழுத்தில் மிக வுறுதியுடையவர்.

அதனைத் தம் வாழ்நாளில் பல கோடிக் கணக்காக உருவேற்றியவர். அதன் பொருட்டு அவர்கள் கைக்கொண்ட முறை நாடோறும் அகம்புறம் தூயராய்த் தூய இடத்தமர்ந்து சிவ நினைவுடன் ஒரு குறிப்புப் புத்தகத்தில் வரிசை வரிசையாக எண் முறைவைத்து எழுதிவருவது. அது கோடி என்னும் எண் நிறைந்ததும், பாடல் பெற்ற திருவூர்களிற் சென்று சிவனை மலர் தூவி வழிபட்டுத் திருவடியில் புத்தகத்தோடொப்புவித்தல்.

இச் சிவத்தொண்டினை ஏனையோரும் கைக்கொண்டு உய்தற் பொருட்டுத் திருமுறை நூல்கள் பல அவ்வப்போது வெளியிட்டு நன்கொடையாக வழங்கி யுள்ளார்கள். அந்நூற்களைப் பெற விழையும் அன்பர்கள் நூற்களுக்குத் தக்கவாறு திருவைந்தெழுத்தை ஆயிரம், பதினாயிரம், நூறாயிரம் இவற்றிற் குறித்திட்ட எண்கள் முதலியனவாக வரையறுத்தபடி எழுதியனுப்புதல் வேண்டும். அவ்வாறு எழுதியனுப்பிப் பலர் பல நூற்கள் பெற்று நன்மை எய்தியுள்ளார். அப்பழக்கத்தால் திருவைந்தெழுத்தை ஓதலும் ஓதத் துணைபுரிதலும் இயல்பாயின.

'சிவஞானபோதப் பாடம்' கேட்கும் பேரார்வம் உடையவர். நம் கழகச் சார்பில் திருநெல்வேலியில் 27-4-52 முதல் 30-5-52 வரை திரு. து. சு. கந்தசாமி முதலியார் அவர்கள் ஆசிரியராக இருந்து நிகழ்த்திய பாடவகுப்பில் முதுமைத் தோற்றத்தும் இளமைப் பண்போடிருந்து விடாது பாடங்கேட்டனர். நுணுக்கமான வினாக்கள் எழுப்பிக் கற்பார்க்கு ஊக்கம் காட்டினர். அதுபோன்று சமாசத்தரால் பாபநாசத்தில் நடத்திய சிவஞானபோத வகுப்புக்களிலும் கேட்டனர்.

சிவனடிநீழலெய்தல்

இத்தகைய தவப்பெரியார் 27-6-1955 திங்கட்கிழமை இரவு தம் இல்லத்துப் பெண்மக்கள், மருகர், பெயரர் பெயர்த்தியர், ஆண்வயிற்றுப் பெயரன் அவர் தம் துணைவியர் உற்றார் நண்பர் ஊரவர் புடையிருந்து திருமுறையோதச் சிவநினைவுடன் ஆவி நீத்தனர். இவர்கட்கு மூன்று பெண்மக்களும், ஆண்வயிற்றுப் பெயரர் ஒருவரும் உளர். அவர்தம் ஆவி என்றும் சிவனடி நீழல் எய்தி இன்புறுமாக. அவர்தம் வழியினர்க்கும், அருமை மருகர் இந்துமத அறநிலையக் கழக ஆணையர் சைவத்திருவாளர் சங்கர வடிவேலுப் பிள்ளை, ஐ. ஏ. எஸ்., அவர்கட்கும் எங்கள் பரிவும் ஆறுதலும் உரிமையாகுக.

வாழ்க சிவஞான வள்ளல் வழிமரபு

நெய்தலே நெய்தல்

[வித்துவான், திரு. ப. சு. நடராசன்.]

ஆம்! நெய்தலே நெய்தல். நெய்தற் றொழிலே நெய்தல். இல்லை இல்லை. வலை நெய்தலே நெய்தல். அதுவுமின்று; நெய்தற் பூக்கள் நிறைந்த காரணத்தால் நெய்தல். இவ்வாறு பெயர் பெற்றதென்று பலவாறாகப் பகர்வார்கள் பலர், தங்கள் தங்கள் கருத்திற்கேற்ப.

தமிழறிஞர்கள் தன்னுட்கிடக்கையை யுணர்த்த, குறிப்பிட்ட பண்பும் தொழிலும் காரணமாக, அவ்வந் நிலங்கட்குப் பெயர் வைத்தார்களோவென்று ஆய்ந்தாய்ந்து பார்க்கும் நிலையிற் றிகழ்கின்றது.

இவ்வாறாயின், நெய்தல் என்ற பெயர் பொருள்பற்றி வந்ததா? அன்றிப் பொருளில்லாமல் வந்ததா? என்பதற்குப் பொருளில்லாமல் பண்டைப் பெரியோராம் சான்றோர்கள் எவற்றிற்கும் பெயர் வைத்திருக்கமாட்டார்கள், என்று உறுதியுடன் கூறிக்கொள்ளலாம்.

அப்படியாயின் நெய்தல் என்ற சொற்குப் பொருள் என்னையோவென்று ஆய்ந்து நோக்குவோமாயின், முதற்கண் கூறியபடி கடற்கரைவாழ் மக்கள் தம் தொழிலின் பொருட்டு நெய்தல் வேலையைக் கைக்கொண்டார்களா? அல்லது வலைஞராதலும் (ஒரு சார்பில்) நெய்தல்நிலப் பிரிவினராகலின், வலை நெய்து வாழ்ந்த காரணத்தால், அந்நிலத்திற்கு நெய்தலெனத் தெற்றெனப் பெயர் வைத்தார்களா? என்றுமறியக் கிடக்கின்றது.

அத்துடன் நம் ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியத்திற்கு உரைவரையப்போந்த நச்சினார்க்கு இனியர் கூற்றையும் ஆய்வாம். இந் நச்சினார்க்கு இனியர் அவ்வொல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியத்தின் முதலுரையாசிரியராம் இளம்பூரண வடிகளின் கருத்தை மறுக்கவெண்ணி, (போலும்) ஐந்து நிலங்களும் தத்தமக்குரிய ஒழுங்கங்களினால் பெயர்பெற்றன என்று பகர்ந்து கூறுதல்தான் பொருந்துமென்றவராய், ஐந்து நிலங்களும் தங்கள் தங்களுக்கே யேற்ற ஒழுக்கங்களினாற் பெயர் அடைந்தன என்று அறைந்து கூறுவதன்றி, "முல்லை முதலிய பூவாற் பெயர் பெற்றன இவ்வொழுக்கங்களெனின் அவ்வந் நிலங்கட்கு ஏனைப் பூக்களும் உரியவாகலின், அவற்றாற் பெயர் கூறலும் உரியவெனக் கடாவுவாற்கு விடையின்மை யுணர்க" என்று மறுத்துப் போந்தார்.

நச்சினார்க்கினியர் கூற்றுப்படி நெய்தல் என்ற சொற்குப் பொருள் இரக்கம் என்றுகொண்டு, இவ்வொழுக்கத்தினாலும்

பெயர் கூறியது பொருந்துமென்று கொள்வதன்றி, இளம் பூரணர் கருத்தையும் மறுப்பதற்கில்லை. எவ்வாறேனெனின், பலமரங்கள் செறிந்தடர்ந்த தோட்டத்தைப் பெரும்பான்மை பற்றிக் "கமுகந்தோட்டம் என்றாற்போல நெய்தற் பூக்கள் மிக்குள்ளமைபற்றியும், தலைவன், தலைவியை நாடித் தேரூர்ந்து வருதற்கண், கடற்கரையிற் படர்ந்த நெய்தற்கொடி தேருருளை களாற் துண்டுபடுத்தப்படும்" என்று இலக்கியங்களில் வருத லானும், அவர் கூற்றும் கொள்ளவேண்டியதன்றித் தள்ள வேண்டிய கூற்றன்றாம் என்க. இது நிற்க.

இனி, சில புலவர்களின் கவிச்சுவையைக் கண்டு களி கூர்வாம். நெய்தல்நிலத் தலைவியைத் தலைவன் பிரிந்தான்; பிரிந்தது ஆற்றகில்லாது, நாணத்தின் எல்லைகடந்து, கலங்கி அறிவழிந்து கூறுகின்றாள்.

முதற்கண் திங்களிடத்துள்ள குறுமுயலை நோக்கி, "குறு முயலே! யான் பிரிந்து வாடற்குக் காரணமாய கேள்வனைக் காட்டுவாய்! காட்டாயாகில் நின் பகையாய நாயை நின்னிடத் துச் சினப்படுத்திக் கடிக்கவிடுவேன். அத்துடன் நின்னை விடு வனோ? வேட்டுவருள்ளவிடஞ் சென்று முயலொன்றுண்டென அறைவேன். அதுவுமேயன்றி நீ அரணாக உறைகின்ற திங்க ளோடே, துன்புறுத்தி விழுங்கும்படி மதிக்குப் பகையாம் பாம்பிடத்துப் பகர்வேன், ஆதலின், நீ தப்பித்துக்கொள்ள (குறுமுயல்பால் இரக்கங்கொண்டு) என் கணவனும் கேள்வனைக் காட்டென்பாள். இதைத்தான் கற்பனைக் கடலாகக் காட்டு கின்றார் ஆசிரியர். பாருங்கள் பாட்டை,

"திங்களுள் தோன்றி இருந்த குறுமுயால்
எங்கேள் இதனகத் துள்வழி காட்டீமோ
காட்டீ யாயின் கதநாய் கொளுவுவேன்
வேட்டுவர் உள்வழிச் செப்புவேன் ஆட்டி
மதியொடு பாம்பு மடுப்பேன் மதிதிரிந்த
என்னல்லல் தீரா யெனின்."

அடுத்ததாக, காற்றைக் கண்ணுற்றுக் கூறுகின்றாள், "வளியே! கதிரவன் கதிர்கள் உள்ள இடமெல்லாம் சென்று வீசும்நீ, என்னமுழைகயுண்டு காரணமில்லாமற் பிரிந்தானைக் காட்டாயோ? காட்டாயாயின், என் கண்ணீரைத் தெளித்து அதன்கண் உண்டாம் அழலாலே நின் மேனியெல்லாஞ் சேரச் சுட்டுவிடு வேன்," என்று வஞ்சினங் கூறுமுறையில் கற்பனைக் களஞ்சிய மாம் நல்லந்துவனார் கண்ட செய்யுளையே காணுங்கள்:

"வளியே எதிர்போம் பலகதிர் ஞாயிற்று
ஒளிஉள் வழியெல்லாம் சென்று முனிபுஎம்மை
உண்மை நலனுண்டு ஒளித்தானைக் காட்டீமோ

காட்டாயேல் மண்ணகமெல்லாம் ஒருங்கு சுடுவேன்என்
கண்ணீர் அழலால் தெளித்து"

அத்துடன் விட்டாளா? அவ்வாற்றாளாய தலைவி, கடலையும் நோக்கிக் கலக்குகின்றாள். "ஏ! கடலே! கண்ணான கணவனைக் காண்பதற்கு வழிவிடாயாகில் என்ன செய்வேன் தெரியுமா? நின் நீரிடமெல்லாம் வெறுமணலாம்படி என் புறங்காலாம் அடிப்புறத்தாலே நீரெல்லாம் வற்றிப்போம்படி இறைப்பேன். 'அது உன்னால் முடியுமோ?' என்று, ஏளனச் சிரிப்புச் சிரித்தாலும் சிரிப்பாய். யான் செய்கின்ற செயலுக்கு அறமானது துணை செய்தலுமுண்டு. இதிற் றடையில்லை. இதைப் புனைகின்றார் கவி பூங்காவாக, நகைச்சுவை ததும்பும்படி. பாருங்கள் அந் நகைச்சுவை அடிகளை,

"பேணான் துறந்தானை நாடும்இடம் விடாயாயின்
பிறங்குஇரு முந்நீர் வெறுமண லாக
புறங்காலிற் போக இறைப்பேன் முயலின்
அறம்புணை யாகலும் உண்டு."

இப்படி வேடிக்கையாகக் கவிபுனைவதிலும் வல்லவர்போலும் நல்லந்துவனார்!

நிற்க, கலைமகளின் சொற்றிறங் காண்பதுங் களிப்புடைத்தாம். தலைவனுக்கும் தலைவிக்குமிடையில் சிக்குண்டதாகக் கற்பிக்கிறார் தோழியை. பாருங்கள் சொற்றிறமையை, "பெரும! நீ நினது அன்புடைமை மிக்குள்ள செவ்வியால், கொல்லுதல் வல்ல ஆண்முதலைகள் நிறைந்த வழியிலே, பிறர் செல்வதைத் தடுத்து நிற்கும் கானற் கடற்றுறை இருங்கழியை நீந்திக் கடந்து தலைவியிடத்து வருகின்றாய். தலைவியோ தன் அறியாமையிற் சிக்குண்டு நின்னிடர் குறித்து நைகின்றாள், வரும் வழியின் கொடுமை நோக்கி.

"நீங்கள் இருவரும் இப்படி இருக்க, நானோ நஞ்சுண்ட இரட்டைக் குழந்தையைக் கண்டு, நடுக்குற்று, இருவர் பக்கலும் இரக்கங்கொண்டு, இருவரிடத்தும் நலனுண்டாதல் நினைத்து மருந்தளிக்கும் அன்னைபோல, உங்களிருவருக்கும் வரைவாகிய மருந்தளிப்பதைத் தவிர, வேறு வழி அறியாளாய்த் தவிக்கிறேன். இக்காலத்து" என்கிறாள்தோழி. செய்யுளுருவிலும் காணுங்கள் இச்செய்தியை:

"கொடுங்கால் முதலை கோள்வல் ஏற்றை
வழிவழக் கறுக்கும் கானலம் பெருந்துறை
இனமீன் இருங்கழி நீந்திநின்
நயன் உடைமையின் வருதி இவள்தான்
மடன் உடைமையின் உயங்கும், யான்அது

கவைமகன் நஞ்சு உண்டாங்கு
அஞ்சுவல் பெருமதி! என் நெஞ்சத்தானே"

இக் கவிச்சுவையைத் தெளிவுடன்-நுண்மாண் நுழைபுலத்துடன் கண்டால் நெக்குநெக்கு உருகல் வேண்டாவோ!

'குறுந்தொகை' கண்டோம் 'நெடுந்தொகை' எப்படி? காண்பாம். நெடுந்தொகையாம் அகத்தில் 'செல்லூர்கிழார் மகனார் பெரும்பூதங் கொற்றனார்' தலைவனைப் பிரிந்த தலைவியின் நிலையைக் காட்டுகின்றார். தலைவியை நோக்கித் தோழி கூறுவதாக "தலைவி மணங்கமழ் மணலிற் கணங்கொள் ஆயமொடு கலந்து விளையாடாநிற்குங்கால், தேரினைத் தேர்ப்பாகனொடு நீக்கி நிறுத்தித் தாரையும் கண்ணியையும் அணிந்தவனாகி அணிமையில் வந்து, ஒரு தலைவன் யாம் கட்டிய வண்டலாலியன்ற விளையாட்டு வீட்டைப் புகழ்ந்த சொல்லன் ஆக, அதற்கு விடை பெறானாகவும் திரும்பிச் சென்றான். இவ்வாறு சென்றதை நினைத்தவளாய், துன்பத்தால் தோள்மெலிய, பெண்டிர்கள் தூற்றும் அலரால் உள்ளங் கலங்கி, வளைகழன்ற நம்முடன் இக் கடற்றுறையும் இரக்கங்கொண்டு துஞ்சாது துன்பப்படுகிறது போலும் இவ்விருளிலே" என்று கூறுகின்றாள் தோழி. இதைத் தான் கவியுருவிற் பிழிந்தார் கவிவாணர் பின்வருமாறு:—

"கணங்கொள் ஆயமொடு புணர்ந்து விளையாடக்
கொடிஞ்சி நெடுந்தேர் இளையரொடு நீக்கித்
தாரன் கண்ணியன் சேர வந்து ஒருவன்
வரிமனை புகழ்ந்த கிளவியன் ஆவதும்
மறுமொழி பெறாஅன் பெயர்ந்தனன் அதற்கொண்டு
அரும்படர் எவ்வமொடு பெருந்தோள் சாய
அவ்வலைப் பரதவர் கானலஞ் சிறுகுடி
வெவ்வாய்ப் பெண்டிர் கவ்வையிற் கலங்கி
இறைவளை நெகிழ்ந்த நம்மொடு
துறையுந் துஞ்சாது கங்கு லானே."

இவ்வாறாகப் பண்டை நம் புலவர்கள் தங்கள் தங்கள் கருத்தைத் தடங்கலின்றித் தரணிக்குக் கொடுத்துச் சென்றனர். அதை நம் வண்டமிழ் நாட்டார் யாவரும் நுகர்தல் வேண்டாவோ?

நுகரும் இன்பத்தின் இடையில், நுண்ணிய பொருள்களாம் அறவுரைகளையும் எளிதாக நுழைத்து விடுகின்றார் நம் நல்லந்துவனார் என்பதற்குச் சான்றாக ஒன்று காண்பதும் தகுதியுடைத்தாம்.

இல்வாழ்க்கை இயல்புடன் நடத்துவதென்று நவில்வது மிடியுற்றார்க் கொன்று உதவுதலையாம்.

ஒன்றைப் பாதுகாத்தல் என்று பறையறைவதெல்லாம், கூடினாரைப் பிரியாதிருத்தலையாம்.

மக்கட்கேற்ற பண்பெனப்படுவது உலகத்தோடு ஒட்ட ஒழுகுதலையாம்.

அன்பென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது, தன் உறவினரை நகை முகங்கொண்டு, பகைமுறை கொள்ளாது கெடாதிருத்தலையாம்.

அறிவு அறிவு என்று கூறுவதெல்லாம் அறியாதார் தன்னை நோக்கிச் சொல்லுஞ் சொல்லைப் பொறுத்துக் கொள்வதாம்.

ஒருவற்கு ஒருவன் உறவு என்று கூறப்படுவது, கூறிய தொன்றினை மறுது செய்தலையாம்.

நிறை யென்று சொல்லப்படுவது, மறைந்தது ஒரு செயலைப் பிறர் அறியாது ஒழுகுதலையாம்.

முறை முறை யென்று மக்கள் முறையிடுவதெல்லாம், நமரென்று கண்ணோட்டஞ்செய்யாது, அவர் செய்த குறைக்கேற்ப முறையாக உயிர் வாங்குதலையாம்.

பொறை யென்று புகலப்படுவது, பகைவரைக் காலம் வருமளவும் பொறுத்திருந்து வெல்லுதலையாம்.

இக்கருத்தமைந்த கவியை ஆசிரியர் செய்தபடியே காண்பது நலந்தருமன்றோ? பாருங்கள் அக்கவிதையாம் அறவுரையை:

"ஆற்றுதல்என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை
அறிவெனப் படுவது பேதையார்சொல் நோன்றல்
செறிவெனப் படுவது கூறியது மறாஅமை
நிறையெனப் படுவது மறைபிறர் அறியாமை
முறையெனப் படுவது கண்ணோடாது உயிர்வௌவல்
பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்"

இவைகளையெல்லாம் நாம் உணர்ந்துகோடல் கடமையன்றோ? கடமையுணர்ந்து நாமும் பிற்கால மக்களுக்குக் கவிபுனைய வேண்டாவோ?

இத்துடன் இது நிற்க; சங்கப் புலவர்கள் உவமைகூறி ஒரு பொருளை விளக்குவதில் கைதேர்ந்த அறிஞர்கள் என்றுதான் கூறவேண்டும். மேற்கோளாக சிலவற்றை ஆய்தலும் பொருந்துமன்றோ? மாலையின் துன்பத்தைச் சிறப்பிக்கவந்த ஆசிரியப் பெருமகனார் நல்லந்துவனார், உவமை கூறுகிறார் (யாரும்) சொல்லொணா உவமையாக.

முதலில் நீர் வெள்ளத்திலே அகப்பட்டுக் கரையேறமாட்டாது தடுமாறிக்கொண்டிருக்கும் மருண்ட பார்வை மரையினது மார்பகத்தை நோக்கிக் கணைதொடுக்கின்ற கயவனும் கொடியவனைப்போல, என்னை அல்லற்கடற்கண் அழுத்தி இன்னற் படுப்பிக்க வந்தாயோ ? ஏ ! அருளில்லாத மாலையே என்றும்,

இரண்டாவதாகப் போரிலே தோற்றிருந்தவர்களை அவர்கள் பட்ட தோல்வியைச் சொல்லிச் சொல்லி இகழ்ந்து சிரிப்பாரைப் போல, பொறுத்தற்கரிய இன்னற்கடலில் ஆழ்ந்து துன்புறுகின்ற என்னை வருத்துவிக்க வந்தாயோ? அஞ்சும்படியான கடிய மாலையே என்றும்,

மூன்றாவதாக முன்பே வெந்ததொரு புண்ணிலே பின்பொரு வேலைச் சொருகி அல்லலுழப்பிப்பாரைப்போல, என் உடல் வெதும்புதற்குக் காரணமான காமநோயிலே கிடந்து, அழுந்துகின்ற என்னை உள்ளி, உள்ள அறிவையும் கலக்கி அறிவைப் போக்க வந்தாயோ? ஏ ! கருணையற்ற மாலையே! என்றும்,

மூன்றுவமையின் மூலமாக மாலையின் கொடுமையை மொழிந்தார். இவ்வுவமையின் உண்மையான சொற்றிறங் கண்டு இன்புறத்தக்கது, தமிழ்நாட்டுப் பண்புடை மக்களின் கடனேயாம். செவியுறுங்கள் அச் சொற்றிறத்தை:

“மாலைநீ;
வெள்ளமான் நிறம்நோக்கிக் கணைதொடுக்கும் கொடியான்போல் ;
அல்லற்பட் டிருந்தாரை அயர்ப்பிய வந்தாயோ
மாலைநீ,
போர்தொலைந் திருந்தாரை பாடுஎள்ளி நகுவார்போல்
ஆரஞர் உற்றாரை அயர்ப்பிய வந்தாயோ
மாலைநீ,
வெந்ததோர் புண்ணின்கண் வேல்கொண்டு நுழைப்பான்போல்
காய்ந்தநோய் உழப்பாரைக் கலக்கிய வந்தாயோ”

என்னே! என்னே! அவரின் நாவன்மை.

இவ்வாறு கொடுமைசெய்த மாலையே தனக்குரிய காலங் கழிந்ததும் காணாமற் போயது என்பதை யுணர்த்த உணர்ச்சியுடன் கூடிய உண்மையான ஓர் உவமையை உரைக்கின்றார் ஆசிரியர். நால்வகைப் படை வகைகளில் குறைந்த அரசனை, அவன் இளைத்தகாலங் கண்டு, அவன்மேற் போர்தொடுத்து, மேலாய் வந்த பகையானது, அப் பகைமையை விரையப்போக்கி, முறியடிக்கவல்ல, நல்லிறைவன் வந்தெதிர்த்துப் போர்புரிய, பகையரசன் தோற்றோடி ஒளித்தாற்போல, கொடுமை செய்யப்போந்த மாலையும், தேரூர்ந்த கணவன்தோன்ற, இராக்காலத்திடத்தே

சென்றொளித்தது என்ற பொருள்படப் பாடுகின்றார் புலவர் பாருங்கள் பாட்டை:

"..............................காதலர் துனைதர
மெல்லியான் பருவத்து மேனின்ற கடும்பகை
ஒல்லென நீக்கி ஒருவாது காத்தோம்பும்
நல்லிறை தோன்றக் கெட்டாங்கு
இல்லாகின்றால் இருளகத்து ஒளித்தே"

மற்றொரு விடத்தில் பகல் செல்லுகின்ற தன்மையையும் மாலைவருகின்ற செவ்விய போக்கினையும் உவமையாக விரித்துரைக்கின்றார், மனம் மட்டற்ற மகிழ்ச்சியில் மகிழ்வுற்றிருக்க,

"நயனும் வாய்மையும் நன்னர் நடுவும்
இவனிற் றோன்றிய இவையென இரங்கப்
புரைதவ நாடிப் பொய்தபுத்து இனிதாண்ட
அரைசனோடு உடன்மாய்ந்த நல்லூழிச் செல்வம்போல்
நிரைகதிர்க் கனலி பாடொடு பகல்செலக்
கல்லாது முதிர்ந்தவன் கண்ணில்லா நெஞ்சம்போல்
புல்லிருள் பரத்தரூஉம் புலம்புகொள் மருண்மாலை"

இவ்வடிகள் என்ன கூறிற்றோவென்று திகைக்க வேண்டாம். பாருங்கள் பொருளை.

(இம்) மன்னனால் விளங்கின, "கலந்த உறவும் உண்மை கூறலும், நன்மையையுடைய நடுவுநிலைமையுமாகிய இவை இனி விளக்கமின்றிப் போயின வென்று, தனக்குப் பின்பு உலகத்தார் இரங்கும்படியாக, அவற்றிற்கு உயர்ச்சி மிகும்படி ஆய்ந்து, பொய்யைக் கெடுத்து நன்றாக ஆண்ட அரசனோடே சேரக் கெட்ட, நல்வழியால் உண்டாய செல்வம்போல, கதிரையுடைய ஞாயிறு மறைதலோடு பகற்காலமும்போக, பின்பு, மாலைக் காலம், ஒன்றையுங் கல்லாமல் மூத்தவனுடைய அறிவுக்கண் திறக்கப்பெறாத நெஞ்சம்போல் அற்பமான இருள் உலகத்திலே பரந்தது.

இவ்வாறு நாட்டின் நலத்தையும், அவர்கட்குண்டாம் துன்பத்தின் நிலையையும் உவமையின் வாயிலாகவும், அறவுரையாகவும் கூறிப்போந்த பண்டை நம் தமிழ்ப் புலவர்களின் நூலாம் குறுந்தொகை நெடுந்தொகை, கலித்தொகைகளை மறத்தலியலுமோ ?

தமிழ் எழுத்துக்களின் சிறப்பு

[சைவப்புலவர், இராவ் சாகிப், டாக்டர். தி. இரா. அண்ணாமலைப் பிள்ளை
L. M. S. S. A., M. R. A. S. (LOND.)]

(சிலம்பு: ௨௧, பரல்: ௧௦, ௪௯௮-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

எகிப்துநாட்டுச் சித்திர எழுத்துக்கள்

எகிப்துநாட்டிற் காணப்படும் எழுத்துக்களும் சித்திர எழுத்துக்களே (Egyptian Hieroglyphics). இவை மறை பொருளாயுள்ள (இரகசியமான) எழுத்துக்களையே குறிக்கின்றனவென்று ஆராய்ச்சி வல்லுநர் கூறுகின்றனர். இது மிகப் பழமையான சித்திர எழுத்தாகும். மேற்கூறப்பட்ட மொகஞ்சதரோ சித்திர எழுத்துக்களுக்கும், திராவிட மொழிகளுக்கும் (சிறப்பாய்த் தமிழ் மொழிக்கும்) மிக நெருங்கிய தொடர்பு காணப்படுகிறதென்று தவப்பெருந் திரு. Rev. H. Heras S. J. அடிகளார் பெருமான் (Director, Indian Historical Commission of Bombay), மொகஞ்சதரோவிற் கிடைக்கப்பெற்ற ஆயிரக்கணக்கான சித்திர எழுத்துக்களைக் கூர்த்த ஞானக்கண்களோடு ஆய்ந்து தெளிந்து உறுதிப்படுத்தியுள்ளார் (இவ் அடிகளார்க்கு உலகம் என்றும் கடமைப்பட்டுள்ளது. தமிழகத்துக்குத் தலைசிறந்த போற்றி இவரே. முழுமுதற் கடவுள், உலக வுண்மைகளை உறுதிப்படுத்த இன்னும் ஒரு நூற்றாண்டுக்காவது இவரது பூதவுடலை உய்விப்பாராக).

எகிப்துநாட்டுச் சித்திர எழுத்துக்களும் **தூய தமிழ் மொழியிலேயே** உள்ளதென்று நெல்லை மாவட்டத்து ஆராய்ச்சியாளர் ஒருவர் கூற முன்வந்துள்ளார். வாழ்க. உண்மை ஓங்குக.

ஆங்கில எழுத்துக்களின் உருவங்கள் சித்திர எழுத்துக்களா?

இன்று நம்நாட்டில் தாய்மொழிக்கு அடுத்தபடியாயுள்ள ஆங்கில எழுத்துக்களின் உருவங்கள் எங்ஙனம் தோன்றியெழுந்தன என்பதைச் சிந்திப்பதும் இங்குப் பொருத்தமே. ஆங்கில எழுத்துக்களின் இற்றைய வடிவங்கள் உருவாகிய முறையைப்பற்றிய சில குறிப்புக்கள் இங்கு எடுத்துரைக்கப்படுகின்றன. கடந்த ஐம்பது ஆண்டுகளாக ஆங்கிலம் கற்று வந்தும், ஆங்கிலமொழி இலக்கியங்களில் உயரிய பட்டங்கள் பெற்றுள்ள பலஅறிஞர்களுடன் நெருங்கிப் பழகியும், ஆங்கிலமே தனித் தாய்மொழியாக நிலவும் மேனாடு சென்று மருத்துவக் கல்லூரியிலும் கற்றுப் பட்டமும் யாம்பெற்றிருந்தும், பின்வரும் குறிப்புக்கள் இத்தனை நீண்டகாலமாய் எம அறிவிற்கு எட்டாமலிருந்தது நினைக்குந்தோறும் பெருவியப்பாகவே யிருக்கின்றது.

ஆங்கில எழுத்துக்கள், இன்று பல உருவங்களிற் காணப்படு கின்றன. இவை, இந்த உருவங்கள் ஏற்றதற்குத் தக்க ஏதுக்கள் இருக்கத்தான் வேண்டுமென்று பலநாள் சிந்தித்ததுண்டு. தற் செயலாக, மூன்றாண்டுகளுக்குமுன், திருக்குற்றாலத்தில் (தென் காசி வழி) ஒரு நன்னாளில், கீழ்க்கண்ட குறிப்பு எமக்குக் கிடைத்தது. இங்கிலாந்தில் மான்செச்டர் (Manchester) பல்கலைக்கழகத்தில் செமிட்டிக் (Semitic) மொழிகளைக் கற்றுக் கொடுக்கும் பேராசிரியர் பன்மொழிப் புலவர் எம். எ. கான்னி (M. A. Canney, Profesor of Semitic Languages) என்பவர் ஆங்கில எழுத்துக்களின் உருவங்கள் எங்ஙனம் தோன்றின வென்பதைப் பல்லாண்டுகளாக, ஐரோப்பிய மொழிகள் பலவற் றோடும் ஒப்பிட்டு நோக்கி, ஆராய்ச்சி செய்து வந்துள்ளனர். இவரது கூற்று, பின்னொரு தொடர்ச்சிக் கட்டுரையாக விரிவாய் விளக்கப்படும். இவர் ஆங்கில எழுத்துக்கள் முதலிற் சித்திர எழுத் துக்களிலிருந்தே தோன்றியுள்ளன என்பதை ஐயந்திரிபற எடுத்துக்காட்டியுள்ளார். அது எங்ஙனம் என்பதற்கு அவர் சொல்லியபடி இங்கு ஒரு சான்று காட்டுதும்.

ஆங்கில எழுத்துக்கள் உரோமன் எழுத்துக்களின் உருவங் கள் (Roman Script) என்னும் பெயர் பெற்றுள்ளன என்பது உலகம் அறிந்ததே. ஆல்ஃபபெட் (Alphabet) என்னும் சொல் எபிரேய (Hebrew) மொழியில் உள்ள முதல் இரண்டெழுத் துக்களாலாயது (Aleph, Beth). இதை கிரேக்க நெடுங்கணக்கில், Alpha, Beta என்று கூறுவர். இதினின்றே A, B என்னும் ஆங்கில எழுத்துக்கள் உருவாயின.

சித்திர எழுத்துக்களிலிருந்தே இன்று நிலவும் ஆங்கில எழுத்துக்களின் உருவங்கள் எழுந்தன என்பதற்கு ஒரு சான்று காட்டுதும். ஆங்கிலத்தில், முதல் எழுத்தாகிய 'A' என்னும் எழுத்தை எடுத்துக்கொள்வாம். ஆல்ஃப் (Alef) என்னும் எபிரேய எழுத்திலிருந்து, Alpha என்னும் கிரேக்க எழுத்து வந்தது. இது பின்னர் உரோம எழுத்தில் ஆளப்பட்டு, பின்னர் ஆங்கிலத்தில் வழங்கப்பட்டுள்ளது. Alf என்னும் சொல் எருது (Ox) என்னும் பொருள் தரும். இப்பொழுது 'A' என்னும் எழுத்து 'எருது' என்று குறிக்கும் சித்திரத்திலிருந்து (Fugure of ox) எங்ஙனம் உருவாயிற்றென்பதை நோக்குவாம். ox என்பது எருது (மாடு). மாட்டைக் குறிப்பதற்காக மாட்டின் தலைமட்டும், முதலில், படமாக எழுதப்பட்டது. மாட்டின் தலையில் இரண்டு கொம்புகள் உண்டு. முதல் முதலில் மாட்டின் தலையைக் குறிப்பதற்காக 'A' என்னும் எழுத்து '∀' தலைமாறிய உருவத்தில் எழுதப்பட்டு வந்ததாம். இங்குக் காட்டிய உருவத்

தில் (கீழ்பாகம்) முக்கோணம் போலிருப்பது மாட்டின் தலையை யும், (மேற்பாகம்), பக்கங்களிற் மேல்நோக்கிப் போகிற இரண்டு வரிகள் மாட்டின் இரண்டு கொம்புகளையும் சுட்டிக் காட்டும். முதலில் '∀' போன்ற படமாக எழுதப்பட்டுவந்த உருவம் பின்னர் 'A' என்று தலைகீழாக மாற்றப்பட்டு, இன்றுள்ள உருவம் அடைந்துள்ளது. ஆகவே, எபிரேய Aleph என்னும் எழுத்து Alpha என்று கிரேக்க எழுத்தாகத் திரிந்தது. பின்னர்ப் பல்லாண்டுகளாய் அது ஆங்கிலத்தில் '∀' என்ற வடிவில் எழுதப்பெற்று, அதற்குப் பின்னர், 'A' என்று தலை மாறி உருவம் பெற்றது. இதுதான் 'A' என்னும் எழுத்தின் உருவ வரலாறு. ஆதலின், ஒரு எருதைக் குறிக்கும் சித்திரத்தி லிருந்து 'A' என்னும் எழுத்து வந்துள்ளது. இதேமாதிரியாக, ஆங்கில எழுத்துக்கள் ஏறத்தாழ முழுவதற்கும், இன்னின்ன சித்திரங்களிலிருந்து இன்னின்ன வந்தனவென்று M. A. கான்னி என்னும் பேராசிரியர் தம் கூரிய அறிவால் பல ஆதாரங் களைக் காட்டி உறுதிப்படுத்துகின்றனர். ஆங்கில எழுத்துக் களின் உருவங்களைப்பற்றி விரிந்த முறையில் அடுத்து எடுத் துரைப்பது எமது நோக்கம். ஆங்கில எழுத்துக்களின் இற்றைய உருவங்களை நன்காராய்ந்து, சித்தாந்தப்படுத்துவது, ஆங்கிலங் கற்றறிந்த பேரறிஞர்களின் கடமை. இத்தகைய ஆராய்ச்சி பல நன்மைகளையும் இன்பங்களையும் அளிக்கும் என்பது எமது திண்மையான எண்ணம்.

பண்டைத் தமிழர் பழங்குடி மக்களில் மிகத் தொன்மை வாய்ந்தவர் என்பதை எவராலும் மறுக்கமுடியாது. இதைப் பற்பல நுண்ணிய ஆராய்ச்சியாளர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். பழைய கற்காலத்து மக்கள் கையாண்டுவந்த, கல்லினால் ஆக்கப் பட்ட ஆயுதங்கள் (Paleolithic Instruments made of Quartzite) நமது நாட்டின் தென்பாகங்களில் சில இடங்களில் அகப்பட்டு வருகிறதென்பது உண்மை. இதனினின்றும் ஊகிக்க வேண்டியதென்னை? பழந்தமிழ்க்குடி மக்கள் ஆதிகால மக்களைச் சேர்ந்தவர் என்பதே.

கன்னியாகுமரிக்குத் தெற்கே ஐயாயிரம் மைல் அளவுக்குக் குறையாமல் பெரும் நிலப்பரப்பு (Lemuria continent) இலெ மூரியாக் கண்டம் ஒன்றிருந்து கடல் கோளால் (The Deluge) அமிழ்ந்துவிட்டதென்று W. Scott Elliot, Rudolph Steiner போன்ற பேராராய்ச்சியாளர்கள் முடிபு கட்டியதோ உண்மை யன்றோ!

தமிழகத்துக்குக் கிழக்கே ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள Indonesia நாகரிகம், தென்னிந்திய நாகரிகத்

தினைச் சேர்ந்ததுதான் என்பது உலகறிந்த உண்மை. அண்மையில் அங்குச்சென்று திரும்பிய சிவத்திரு குன்றக்குடி அடிகளார் பெருமானார் அங்குள்ளவர்கள் தமிழர்களே ; தமிழர்கள் நாகரிகமே அங்குத் தலை சிறந்து விளங்குகின்றதென்று தெள்ளத் தெளிய விளக்கிக் கூறுகின்றனர். இந்தோனேசியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் பல்லாயிரமைல் தூரத்துக்குக் கிழக்கே கடல்கடந்து சென்று வாழ்ந்துவரும் தமிழர் இன்றும், மத்திய அமெரிக்காவின் மேற்கு பாகங்களில் Maya & Naga Culture என்றழைக்கப்படும் நாகரிகம் உடையவர்களாயிருப்பது இன்னும் பலர் அறிந்ததில்லை. அதைப்பற்றியும் பின்னர் விளக்கப்படும். அங்குள்ள மக்கள் நாகரிகம், தென்னிந்தியப் பழக்கவழக்கங்களோடு மிக மிக ஒத்திருக்கின்றதென்று, அங்குச்சென்று திரும்பிய மேனாட்டாரும் கூறுகின்றனர். தி. சாமன்லால் என்னும் பேராசிரியர் இதைப்பற்றி மிக விரிவான நூல் எழுதி உதவியுள்ளனர். கன்னியாகுமரிக்கு அருகாமையில் உள்ள நிலப்பரப்புகளிலேயே முதலில் மனிதன் தோன்றியிருக்க வேண்டுமென்றும் பலர் கூறுகின்றனர். ஆரியம் நம் நாட்டுக்குள் நுழைவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே திராவிட மொழிகள் நம்நாட்டில் நிலவுகின்றனவென்று பற்பல பெரும் புலவர்கள் உறுதிப்படுத்துகின்றனர். திராவிட மொழிகளுள் தமிழ்மொழியே மிகப் பழமையானதென்று மொழி ஆராய்ச்சியாளர்களால் ஒப்புக்கொள்ளப்படுகிறது. தமிழ் மொழியே மனிதன் பேசிய முதன் மொழியென்று தமிழ் இசை ஆராய்ச்சிப் புலவர் இராவ்சாகேப் ஆபிரகாம் பண்டிதர், தவத்திரு தனிநாயகம் அடிகளார் முதலியோர் பறைசாற்றுவதும் நாமறிந்ததே. பழங்காலத் தமிழர் ஓவியம், சிற்பம் முதலிய பற்பல கலைகளிலும் உயரிய தேர்ச்சி பெற்றிருந்தனர். என்பது சரித்திர வரலாறு. மொகஞ்சதரோ, எகிப்துநாடு எழுத்துக்கள் சித்திர எழுத்துக்களாயிருப்பது மன்றித் திராவிட மொழிகளுக்கு நெருங்கிய தொடர்புடையதென்று உலக ஞானிகள் கூறுவது முன்னர் எடுத்துக்காட்டப்பட்டது. ஆங்கில எழுத்துக்களும் சித்திர எழுத்துக்களிலிருந்தே தோன்றியிருக்கின்றன வென்பதும் இங்கு நோக்கத் தக்கது. மேலும், பாபிலோனியா (Babyloni), அசீரியா (Assyria), கிரீட் (Crete), சைப்பிரசு (Cyprus) முதலிய நாடுகளிலும் முதன்முதலாக சித்திர எழுத்துக்களே அங்குள்ள மக்களால் கையாளப்பட்டு வந்தனவென்று மொழிவல்லுநர் கூறுகின்றனர்.

(தொடரும்)

தமிழ் அருச்சனை

[சித்தாந்த பண்டிதர், கழகப் புலவர், திரு. ப. இராமநாத பிள்ளை]

புதுமை

உலகில் எங்கும் காணாப் பொருந்தமில் புதுமை நம் நாட்டகத்து மட்டும் காணப்படுகின்றது. அது, தமிழகத்துத் தாய் மொழியாம் செந்தமிழ் மொழிக்குச் சிறுமையும், புதிது வந்த அயன் மொழிக்கு அளவில் பெருமையும் தெருளுணர்வின்றிக் கொடுத்து மருளும் மருளேயாம். பிறந்து மொழி பயில்வது தமிழ். மொழி பயிலும் முற்பருவத்து ஓராட்டு, பாராட்டு, சீராட்டு வாயிலாக உளம்புகுவது தமிழ். பெற்றார் உடன்பிறந்தார், உற்றார், ஒக்கல், ஊரார் முதலாயினாருடன் ஓவாது உரையாடுவது தமிழ். முழுமுதற் சிவனைத் தொழுவது தமிழ். பள்ளியிற் படிப்பது தமிழ். துள்ளி விளையாடுவது தமிழ் உள்ளி ஏவுவது தமிழ். உள்ளுவந்து இயற்றுவது தமிழ். உலகியற் பொருள்களை வழங்கற்கமைந்த காரணப் பெயர்கள் தமிழ். ஊண், உடை அணி, பூச்சு, சூடுதல் முதலிய அரும்பெரும் பொருள்களுக்கு வழங்குவது தமிழ். ஊர்ப்பேர் முதலியன தமிழ். இன்னும் விரிக்கிற் பெருகும். இதுபோல் கூறாதவற்றையும் கூறிக் கண்டு கொள்க.

இங்ஙனமெல்லாமிருந்தும் இல்லத்து நடக்கும் மணச்சடங்கு முதலியவற்றிற்கும், இல்லத்தும் புறத்தும் நடக்கும் பிணச்சடங்கு முதலியவற்றிற்கும், தொன்று தொட்டு நின்று நிலவும் செந்தமிழ் முழுமுதல் தெய்வமாம் சிவபெருமான் வழிபாட்டிற்கும், இயற்கை இனிமை வாய்ந்த தமிழிசைக்கும், நாடாளும் ஆட்சி மொழிக்கும், பீடுசேர் கலைத்துறைகட்கும் அயன் மொழியே சுமத்தப்பட்டு மயலுறுத்துகின்றது. இந் நீக்கரிய போக்காம் பரிவுநிலையை எண்ணுங்கால் உள்ளம்உருகி, உளைந்து செயலறுகின்றது. இத்தகைய பேரிடரான நிலை வேறு எம்மொழியாளர்க்கும் யாண்டும் இன்று. இதனினும் சொல்லொணாப் புதுமையை நல்லுணர்வினர் வேறு எங்குக் காண்பர். நாடும் மக்களும் நனிநாகரிகமும் கூறுசெய்து மதிக்கப்படுவது தாய்மொழி ஒன்றினாலேயாம். தற்பொழுது ஆட்சிமுறையினும் மொழிவாரிப் பிரிவே விழுமிதென மூதறிஞர் மொழிகின்றனர்.

ஒருவன் எய்தும் சிறப்பெல்லாம் அவன்றன் உயிரினும் சிறந்த தாய்மொழியின் சிறப்பினாலேயாம். அச்சிறப்பு உலகிடைப் பிறமொழிக்கெல்லாம் உள்ளதாய்க் காணக்கிடக்கின்றது. அம்மொழிகளெல்லாவற்றினும் தொன்மையதாய், எல்லாத்

துறையினும் மேன்மையதாய், இருவகை வழக்கிலும் ஒருவாது அன்றுபோல் இன்றும் என்றும் நின்றுநிலவுவதாய், தனித் தியங்கும் தனிப் பேராற்றல் வாய்ந்ததாய், இனிமையும் எளிமையும், உயிர்ப்புச்செட்டும், தெளிவும், திட்ப நுட்பமும் இயல்பின் அமைந்ததாய், தொன்மை இலக்கண இலக்கிய மெய்ந்நூற் செறிவினதாய் விளங்கும் 'ஞாலம் அளந்த மேன்மை' நம் தாய் மொழிக்கு மட்டும் அப்பெருமையை நம்மில் சில்லோர் மறைத்தும் மறுத்தும் எய்தவொட்டாது செய்துவருகின்றனர். என்னே இவர்தம் புன்மை. முன்னை ஞான்று 'ஆரியம் நன்று தமிழ் தீது என்ற காரியத்'தைச் செய்த சீரியான் வரிசையில் நிற்கின்றனர். தமிழ், வாழ்க்கைச் சடங்குகளுக்கும், தெய்வ வழுத்துதலுக்கும் ஒவ்வாது என்று புறக்கணிக்கப்படுகின்றது. அத்தகைய தீது தமிழின்மாட்டு என்ன இருக்கின்றது என்று யாரும் எடுத்துரைத்தாருமல்லர். எடுத்துரைக்கவும் இயலாது. அடுத்துக் கொண்டுள்ள அவர்தம் மயக்கேயன்றி வேறின்றெனக. பண்டைச் சங்கச் சான்றோரேயன்றிச் சைவச் சான்றோரும் அவ்வப்போது தமிழின் மேன்மையைத் தனிச்சிறப்பாக எடுத்து வற்புறுத்தியுள்ளனர். தமிழோடொத்த சில சிறப்புகள் ஆரியத்துக்கும் உள்ளமையால் அதனையும் இணைத்துப் பேசியுள்ளனர். ஆரியம் நன்றென்று முனைத்துக் கூறுவார் முனைப்பொடுங்க உண்மை நாட்டியுமுள்ளனர். அது வருமாறு:

> " ஆரியப் புத்தகப் பேய்கொண்டு புலம்புற்று
> வட்டணை பேசுவர் மானுடம் போன்று "
>
> —கக. நக்கீர. கோப.

(இத் திருப்பாட்டு பதினொராம் திருமுறைக்கண் உள்ளது)

இத்தகைய புதுமைக்குள் புதுமை, தமிழ் மந்திரமொழியன்று எனவும், தெய்வத்துக்குப் புரியாதெனவும் தற்காலத்தும் சிலர் கூசாது பேச முன்வருவதே. அங்ஙனம் பேச முன்வரும் சிலருள் சிலருக்கும் செந்தமிழின் சீரிய இயற்கை உண்மைத் தன்மை தெரியுமா என்பது மறுக்கொணா ஐயமே. அந்நிலையில் அவர்கள் எல்லாரும் வழக்கம் வழக்கம் என முழக்குவது நன்றுமோ? விரல்விட்டு எண்ணத்தக்க ஒருசிலர் தமிழ் மக்கட்கும், ஏன்? தம்மில் பெரும்பாலோர்க்கும் ஒன்றுமே புரியாத இடைவழக்காய் வந்த அயன்மொழியை விடாப்பிடியாய்ப் பற்றுடன் வற்புறுத்தி மாறுகொண்டு நிற்பரேல், எல்லார்க்கும் புரிவதாய், ஏன்? அம் மாறுபடுவார்க்கும் புரிவதாய் இறைவனுக்கு நிறைந்த உவப்புத் தருவதாய்த் திகழும் தமிழ் அருச்சனையை வழக்கத்துக்குக் கொண்டுவர வேண்டுமென்னும் திண்மை உண்மைச் செந்நெறி மெய்யன்பர்கட்கு வியப்பையும் நகைப்பையும் தருவ

தல்லது அச் செய்கை வேறென் செயும்? இதுபோன்றே தமிழிசை இயக்கம் தோன்றிய காலத்தும் அயன்மொழி மயலினர் மாறுபட்டனர். களைகட்டப் பயிர் செழிக்குமாறு தமிழிசை இயக்கமே வீறுகொண்டு வென்று விளங்கிற்று. அதுபோல் தமிழருச்சனை இயக்கமும் வீறுகொண்டு விளங்கும். இவ்வுண்மை யுணர்ந்து அம் மாறு கொள்ளும் தமிழ்மெய்யன்பர்களும் ஒத்து உறுதுணையாவார்களாக. ஒருவர்க்கு இரு தாய்மொழி உண்டென்பது யாண்டும் காணவும் கேட்கவும் பெறாத பெரும் புதுமையேயாம். யாண்டும் நற்றாய் ஒருத்தியே. பலராயிருத்தல் பொருந்துவது ஒன்றன்றாம். செவிலித்தாய் பலராவர். செவிலித்தாய் நற்றாய்க்குத் தோழியாவளே யன்றி தலைவியாகாள். நற்றாய் என்றும் தலைவியே. இவ்வொப்பினைப் பொருளுடன் இயைத்து விரிக்குங்கால் தமிழ் நற்றாயும், ஆரியம் செவிலித்தாயும் ஆகும். செவிலித்தாய் நற்றாய்மொழியைக் கற்றிருத்தல் வேண்டும். நற்றாய் செவிலித்தாய் மொழியைக் கற்றல்வேண்டும் என்னும் கடப்பாட்டினள் அல்லள். இதனாலும் தவப்பேற்றால் தாய்மொழியாம் தனித் தமிழ்மொழிக்கு ஏற்றமேயன்றி அயன்மொழியாம் வடமொழிக்கு ஏற்றமின்று. இவ்வுண்மை, "ஆரியத்தொடு செந்தமிழ்ப்பயன் அறிகிலா அந்தகர்" என ஆளுடைய பிள்ளையார் அருளிச் செய்துள்ளனர். ஈண்டுக் காட்டப்படும் 'ஒடு' உருபு 'அதனோ டியைந்த ஒப்பல் ஒப்புரை' என்பதன்கண் அடங்கும். மேலும் கலைமகள் நாற்பத்தெண் புலவராய்த் தோன்றி ஆரியமும் ஏனைப் பதினெண் மொழியும் ஆய்ந்து பின் உய்வு எய்தத் தமிழ் கற்றுப் புலமைசார்ந்து உண்மை ஓர்ந்து உய்ந்தனள் என்னும் வாய்மை திருவிளையாடற் புராணத்துச் சங்கப்பலகை கொடுத்த படலத்துக் கேட்கப்படுகின்றது. அதனாலும் அருந்தமிழ்மொழி, விருந்தாம் ஆரியத்தினும் மிக்கதென்னும் மெய்ம்மை பொருந்தக் காணலாம். அது வருமாறு:

அக்கர நாற்பத் தெட்டு மவ்வழி வேறு வேறு
மக்களாய்ப் பிறந்து பன்மாண் கலைகளின் வகைமை தேர்ந்து
தொக்கவா ரியமு மேனைச் சொற்பதி னெட்டு மாய்ந்து
தக்கதென் கலைநுண் தேர்ச்சிப் புலமையிற் றலைமை சார்ந்தார்.

—திருவிளையாடல், சங்கப்-கக

ஆரியக் கடும்பற்றுள்ளவர் தமிழை அழியாமல் அழிக்கும் வழியினர் என்பது முன்னைய வரலாற்று உண்மையாலும் உணரலாம். திருமுறைகள் ஓதப்பட்டுச் சிறந்து செந்நெறிச் செல்வர்கள் ஈடேறும் பொருட்டுத் தில்லைப் பேர்கொண்ட அந்தணர்பால் திருநெறியாளரால் ஒப்புவிக்கப்பட்டன. அவ்வந்தணர்கள் ஒப்புவித்தார் உள்ளக்கருத்துக்கு முற்றுமாறாக அத் திருமுறைகளின்

வைப்பிடத்தை மறைத்தும், அவற்றைச் செல்லரித்தழிக்க இடங்கொடுத்தும், அபயகுலசேகர மன்னன் அரும்பாடு பட்டு இருக்குமிடம் அறிந்துவந்து உசாவியகாலத்தும் பொருந்தாவுரை புகன்று போக்கவுன்னியும் முன்னின்று முனைந்தனர். இவ்வுண்மை திருமுறைகண்ட புராணத்து நன்கு விளக்கப்பட்டுள்ளது. அக்காலத்துச் செந்தமிழ் மொழிக்குத் துணையாய்த் தமிழையே பாடித் தனிமுதலை வழிபட்டுத் திருமுறை வகுத்து நிலவச் செய்த ஆதி சைவ அந்தணர் நம்பியாண்டார் நம்பியாவர். அம்மரபினராகிய நம் கோவில் குருக்கண்மார் சில்லோரும் நம வழி வாராதுமாறு நிற்பது காலக்கோலமேயாம்.

திருமுறை மாண்பு

செந்தமிழ்த் திருமுறையின் சிறப்புத் 'திருமுறை கண்ட புராண'த்தின் கண் விரிவாகக் காணலாம். ஈண்டு வேண்டிய அளவு ஒரு சிறிது உணர்த்துதும். 'வடமொழி வேதம், வேத முடிபு சூத்திரம் போன்றனவென்றும், சிவாகமங்கள் மலைவகற்றும் பேருரைகள் போன்றனவென்றும் மாதவச் சிவஞான முனிவரனார் வாய்மைகண்டுணர்த்தியுள்ளனர். அவ்வுண்மையை உற்று நோக்குவார்க்கு வடமொழி வேதம் தன்னளவில் கற்பாரை மருளுறச் செய்யும் என்பதே துணிபாம். இவ்வுண்மை திருமுறை கண்ட புராணத்தும் தெளித்தருளப்பட்டது. அஃது, 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' (திருமூலர், உகOச) என்னும் அழியா இயற்கையுண்மையினை அருளால் தெளியக் கண்டவர் செந்தமிழ்ச் செந்நெறிச் செல்வர்களாகிய நம் முன்னோர்கள். பல தெய்வமும் பல சாதியும் நிலவக்கொண்டு மயங்கியும் மயக்கியும் தெளியா வழியொழுகுபவர் வடவாரியர். நம்மவருள் சிலரும அம்மயக்கிலாழ்ந்து மருளுகின்றனர். சிவபெருமானை இவர்கட்குத் தெருள் அருளுமாறு வேண்டிக்கொள்வதே நம் தவமாம். தமிழ்வேதமாகிய திருமுறை உலகவொழுக்கத்தோடு ஒட்டி ஒரு தெய்வவுண்மையையும் ஒருகுலவுண்மையையும் திருவருட் செயலால் நிறுவியுள்ளது. அத்திருப்பாட்டு வருமாறு :

அருமறையைச் சிச்சிலிபண் டருந்தத் தேடும்
அதுபோலன் றிதுவென்று முளதா முண்மைப்
பரபதமும் தற்பரமும் பரனே யன்றிப்
பலரில்லை யென்றெழுதும் பனுவல் பாரின்
எரியினிடை வேவாதாற் றெதிரே யோடும்
என்புக்கு முயிர்கொடுக்கும் இடுநஞ் சாற்றும்
கரியைவளை விக்குமுகன் மிதக்கப் பண்ணும்
கராமதலை கரையிலுறக் காற்றுங் காணே.

—திருமுறைகண்ட, கஎ.

இத் திருப்பாட்டின்கண் மூவர் பாடல்களும் ஏழு திருமுறைகளாக வகுக்கப்பட்டு நிலவும் உண்மை உய்த்துணரக் கிடக்கின்றது. அவை வருமாறு: ஆளுடைய பிள்ளையார் அருட்செயல் பலவற்றுள்ளும் மூன்று செயல்களும், அதுபோல் அரசர்க்கு மூன்று செயல்களும், நம்பிக்கு ஒரு செயலும் கிளந்தெடுத்து ஓதப்பட்டமை. ஒருபுடையொப்பாக இவ்வேழும் முறையே முழுமுதற் சிவன், கூட்டும்அருள், ஊட்டுமருள், வினைநீக்கம், மாயைநீக்கம், மலநீக்கம், திருவடியாக்கம் என்பவற்றின் இயைபு குறிப்பனவாகக் கொள்ளலாம். கூட்டுமருள் - வனப்பாற்றல். ஊட்டுமருள் - மறைப்பாற்றல்.

மந்திரம்

இத்திருமுறைகள் முழுமுதல்வன் அருண்மொழிகளே. அவ்வுண்மை ஆளுடைய பிள்ளையார் "எனதுரை தனதுரையாக" எனவும், "பழுதிலிறை யெழுதுமொழி தமிழ்விரகன், வழிமொழிகள்" எனவும் அருளிச் செய்கின்றமையான் விளங்கும். 'எழுதுமொழி' என்பது ஆண்டவன் ஆருயிர் உணர்வில் அருளால் எழுப்புமொழி என்று பொருள்படும். அம் மொழியினை வழிமொழிந்தருளிய வள்ளலார் வாய்மைப்பிள்ளையார். அதனால் திருமுறைகள் உலகியலோடொட்டிய அருண்மொழிகளேயாம் இவ்வுண்மை வரும் திருப்பாட்டான் உணர்க:

கொண்டுகுல சேகரனுங் கோன்பால் வந்து
குஞ்சரத்தோ னருள்செய்த கொள்கை யெல்லா
மண்டுபெருங் காதலுடன் சொல்லி யந்த
வண்தமிழின் பெருமைதனை வகுத்துச் சொல்வார்
கண்டபெரு மந்திரமே மூவர் பாடல்
கைகாணு மந்திரங்கண் ணுதலோன் கூறல்
எண்டிசையும் சிவனருளைப் பெறுதற் காக
இம்மொழியின் பெருமையையான் இயம்பக் கேள்நீ.

திருமுறைகண்ட, கரு.

கைகண்ட பெருமந்திரம் - உலகியலொழுக்கத்து நிகழக்கண்ட தாய்மை மந்திரம். ஏனைய மந்திரங்கள் குறித்த பயனைத்தர வெவ்வேறாகக் காணப்படுகின்றன. தமிழ்மந்திரமாகிய திருவைந்தெழுத்து எல்லாச் செயற்கும் இயல்பாயமைந்த ஒரு பெருமந்திரமேயாம். அம்மந்திர வடிவினராய்த் திகழும் அருளாளர் திருவாய் மொழியனைத்தும் மந்திரமே யாம். மேற்காட்டிய அருட்செயல் ஏழும் நிகழ்த்தியது திருமுறைத் தீந்தமிழேயன்றோ? அம்முறையால் திருமுறையிற் காணப்படும் எழுத்தும் சொல்லும் சொற்றொடரும் விழுமிய நிறைமொழி மந்திரமேயாம். திருமறைக்காட்டில் திருக்கதவு திறந்ததும் திருக்கொள்

ளம்பூதூரில் ஓடம் சென்றதும் திருமுறைச் செழுந்தமிழ் மாலைகளானன்றே. இவ்வுண்மையினை நடுநின்றுணர்வார் தமிழில் மந்திரமில்லையென்று மயங்கார். அவர்கள் சொல்லுவது ஒருவகையாகப் பார்த்தால் ஓர் உண்மையை உணர்த்துவதாகும். என்னை? வடமொழியினைப்போல் குறித்த சில சொற்றொடர் மட்டும் மந்திரங்களாகத் தமிழில் இல்லை. தமிழின் எழுத்தும் சொல்லும் முழுவதுமே மந்திரம் என்பனவாம். அவ்வுண்மை குமர குருபர முனிவரனார் அயன்மொழியினை அறிவுறுத்தருள வேண்டிப் பாடியருளிய செழுந்தமிழ்ச் சகலகலாவல்லி மாலையே தமிழ் மந்திரமாய் நிறைபயன் அளித்தது. இன்றும் அதனை உண்மையான் ஓதுவார்க்கு அளித்து வருகின்றது. மேலும் திருமுறையில் காணப்படும் பதிகங்களும் உண்மையான் ஓதுவார்க்கு அவரவர் வேண்டும் நற்பயனை அளித்து வருகின்றன. அஃதின்றும் கண்கூடேயாம். இம்முறையினால் மூவர்பாடலைப் பாடல் என்னும் மொழியாற் பாடியருளினர். பாடல் என்பது சொல்லும் பொருளும் விளங்கிச் செவிக்கும் செவ்விய உளத்திற்கும், உணர்விற்கும் சுவையளிப்பதாய்க் கைம்மேல் பயன்படுவதாய்த் திகழ்வது. படுதல் பாடலென்றாயிற்று. மூவர் பாடல் மொழிக்கு மொழி தித்திக்கும் மந்திரங்களே என்பது வரும் தாயுமானச் செல்வர் திருப்பாட்டானும் உணர்க:

> "தேவரெலாம் தொழச்சிவந்த செந்தாள் முக்கட்
> செங்கரும்பே மொழிக்குமொழி தித்திப் பாக
> மூவர்சொலும் தமிழ்கேட்கும் திருச்செ விக்கே
> மூடனேன் புலம்பியசொல் முற்று மோதான்.
>
> —தாயுமானவர், கல்-கசு.

இத்திருநெறிய தமிழ்மந்திரப் பாடல்களைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கப் பின்னுள்ள மெய்யன்பர்கள் ஓதுங்காலும் இறைவன் உகப்பானெனின், அதன் பெருமையை அளவிட்டுரைக்கற் பாலார் யாவர்? இவ்வுண்மை ஆளுடைய நம்பியருளும் அருண்மறையாற் காண்க:

> நல்லிசை ஞானசம் பந்தனு நாவினுக்
> கரசரும் பாடிய நற்றமிழ் மாலை
> சொல்லிய வேசொல்லி ஏத்துகப் பானைத்
> தொண்ட னேனறி யாமை யறிந்து
> கல்லி யன்மனத் தைக்கசி வித்துக்
> கழலடி காட்டியென் களைகளை யறுக்கும்
> வல்லியல் வானவர் வணங்கநின் றானை
> வலிவ லந்தனில் வந்துகண் டேனே. —எ. சு௭-௫.

மேலும்,

"பரந்த பாரிட மூரிடைப் பலிபற்றிப் பார்த்துணும் சுற்றமாயினீர்
தெரிந்த நான்மறை யோர்க்கிடமாய திருமிழலை
இருந்து நீர்த்தமி ழோடிசை கேட்கு மிச்சையாற் காசு நித்தநல்கினீர்
அருந்தண் வீழிகொண் டீரடி யேற்கு மருளுதிரே." —எ. அஅ-அ.

என்னும் ஆளுடைய நம்பி திருப்பாட்டும் மேலதனையே வலி யுறுத்துதல் காண்க.

'கண்ணுதலோன் கூறல் கைகாணு மந்திரம்' என்பது புறத் துத் தோன்றாது அருளாளர் அகத்தே கூறுபடுத்து உணர்த்தும் அருள் ஒலியாகும் அவ்வருள் ஒலி அருளாளர் வாயிலாக வெளிப்பட்டு உலகிடைப் பரவும். இம்முறையால் பாடல் கூறல் என்னும் சொற்கள் பொருளாற்றல் நிரம்பியனவாம் என்க.

வழிபாடு

வழிபாடு எனினும் பூசை எனினும் ஒன்றே. இவ்வழிபாடு இடமுறையால் நான்கு வகைப்படும். அவை, அக வழிபாடு, அகப்புற வழிபாடு, புற வழிபாடு, புறப்புற வழிபாடு என்பன. அக வழிபாடென்பது ஒவ்வொருவரும் சிவ தீக்கை முறையான் அகம்புறம் தூயராய்க் கொப்பூழ், நெஞ்சம், புருவமத்தி என் னும் மூன்றிடத்தும் முறையே ஓமம், அருச்சனை, தியானம் என்னும் முச்செய்கைகளையும் திருவைந்தெழுத்தாலே செய்வ தாகும். இவ்வுண்மை :

அஞ்செழுத்தா லுள்ளம் அரனுடைமை கண்டரனை
அஞ்செழுத்தா லர்ச்சித் திதயத்தில்—அஞ்செழுத்தாற்
குண்டலியிற் செய்தோமங் கோதண்டம் சானிக்கில்
அண்டனும் சேடனும் அங்கு. —சிவஞானபோதம், கூ. ௩-க.

என்னும் மெய்கண்டான் தமிழாலும் உணர்க.

அகப்புறவழிபாடு பூசை மடத்திலேனும், நீர் நிலை அண்மை யிலேனும் திருமுறை வழியாகச் சிவ வழிபாடியற்றல். இவ் வழிபாட்டினையே உடையவர் பூசை எனவும உரைப்பர். இன்ன வர் தம் பொருட்டுத் திருக்கோவில்களிற சென்று சிறந்த நாட் களில் வழிபாடியற்றுவதும் உண்டு. அவ்வுண்மை திருநீலநக்க நாயனார் ஒரு திருவாதிரைநாளில் வீட்டில் செய்யும் அகப்புற வழிபாடு முடித்துத் திருக்கோவில் சென்று புறவழிபாடும் இயற்றினர். அவ்வழிபாட்டினுக்கு அவர்தம் மனைவியாரும் உடன் சென்று வேண்டுவ உடனிருந்துதவினர் எனவும் காண

கின்றோம். இவ்வுண்மை உணர்வார் இஞ்ஞான்று காசியினும் நேபாளம் முதலிய திருவூர்களினும் சிவலிங்கத்தை எல்லாரும் தொட்டு வழிபாடியற்றும் வழக்கம் தொன்மைத் தமிழ்நாட்டு வழக்கமெனத் தெளிவர். ஆயிரத்து நானூறு யாண்டுகளுக்கு முன்னிருந்த இப்பெரு நெறி வழக்கம் வரவர அயலவர் கட்டி வழங்கிய நமமனோர்க்குப் புரியாமொழியில் காட்டிய பொய் விதியினால் தடைப்பட்டது போலும். இந்நன்முறை மீட்டும் தமிழகத்து மலர்தல் வேண்டும். வழிபாட்டுண்மை வரும் சேக்கிழாரடிகள அருண்மொழியால் உணர்க:

அணைய வந்துபுக் கயவந்தி மேவிய வமுதின்
துணைம லர்க்கழல் தொழுதுபூ சனைசெயத் தொடங்கி
இணைய நின்றங்கு வேண்டுவ மனைவியா ரேந்த
உணர்வின் மிக்கவ ருயர்ந்தவர்ச் சனைமுறை உய்த்தார்.

—கஉ. திருநீல நக்-௬.

அரிவாட்டாய நாயனார் தாம் அமுதாக்கித் திருக்கோவிலிற் சிவபெருமானுக்கு ஊட்டினர். இதனாலும் தமிழக மெய்யன்பர்கள் சித்தாந்த சைவ முறைப்படி ஒரு குலத்தவரே யன்றிப் பல சாதியாரல்லர். மேலே கூறிய வழிபாடுகளில் சாதிப் பிணக்கைப் புகுத்துவது தவறு. பேர் கொண்ட பார்ப்பனரே அன்று முதல் சாதிப்பிணக்கைச் சாதித்துப் பொய்ம்மை வழிப் புகுத்துகின்றனர். வழிபடுவார்க்கு வழிபடப்படும் பொருளைத் தீண்டற்கும் உரிமையின்றென்பது பெருநோக்கு உடையார் எவர்க்கும் ஒவ்வாததொன்றேயாம். சாதியை அறக்களைவதே சைவமுதல்வராம் நால்வர் கண்ட நன்னெறி. அதற்குரிய செய்யுட்கள் பலவற்றுள் இரண்டொன்று காட்டுதும்.

'சாத்தி ரம்பல பேசும் சழக்கர்காள்
கோத்தி ரமுங்குல முங்கொண் டென்செய்வீர்
பாத்தி ரஞ்சிவ மென்று பணிதிரேல்
மாத்தி ரைக்கு ளருளுமாற் பேறரே.' —டு. ௬0 - ௩.

'வைத்த நிதிபெண்டீர் மக்கள்குலம் கல்வியென்னும
பித்த வுலகிற் பிறப்போ டிறப்பென்னும்
சித்த விகாரக் கலக்கம் தெளிவித்த
வித்தகத் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ.'

—அ. திருக்கோ - ௬.

வழிபடும் மெய்யன்பர்கட்கு வழிபடப்படும் திருவுருவின் திருவடியைத் தீண்டிக் கண்ணினும் முடியினும் ஒற்றிக்கொள்ள

வேண்டும் என்னும் காதலுக்கு அளவின்றென்பது அவர்கள் மெய்யடியார்கள், ஆசிரியன்மார், ஆன்றோர்கள், சான்றோர், தம் முன்னோர் முதலியோர் திருவடிகளை ஆராக் காதலுடன் தீண்டி முடிமீது கொள்ளுதலால் நேரிற் காணலாம். இத்தகையோர் காதலைப் புரியாப் பொருந்தாப் போலி விதியால் தடுப்போர் கொடுமையை என்னென்பது? காதல் மிக்க கண்ணப்ப நாயனார் சிவலிங்கத்தைக் கண்டதும் 'ஓடிச் சென்றார் தழுவினர் மோந்து நின்றார்' என்பது இயற்கைக் காதலன்றோ! இச் செயற்கருஞ் செயற்கு முன்னின்று வழிகாட்டித் துணை நிற்கவேண்டிய ஆன்றோர் பழியெனவும் பாராது வழிமறுப்பரேல் என் செய்வது? என்றும் பார்ப்பனர் இவ்வாறுதாம் இருப்பர் போலும்! ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகளுக்கு முன் திருப்பழனியில் ஆயிரக் கணக்கான ஆண்டுகள் திருக்கோவில் வழிபாடு செய்துவந்த பண்டாரத்தார் உரிமையைப் பார்ப்பனச் சூழ்ச்சியால் திருமலை நாயக்கன் பறித்து நல்கினான் என்பது வரலாறு கண்ட வுண்மை. ஆயினும் இன்றும் பழனி ஆண்டவற்குத் திருமஞ்சனம் கொடுக்கும் உரிமை பண்டாரத்தார்பாலேயே இருக்கின்றது.

திருக்கோவில் வழிபாடு ஆதி சைவக் குருக்கண்மாரால் உலகோர் பொருட்டுத் திருக்கோவில்களிற் செய்யப்படும். இதுவும் புறவழிபாடேயாம்.

திருக்கோவிலின் புறத்தே திருவிழாக் காலங்களில் நடக்கும் திருவுலா, திருத்தேர், தெப்ப விழா முதலியன புறப்புற வழிபாடாகும். இவ்வழிபாடுகளெல்லாம் திருமுறை யோதி வழிபட வேண்டுமென்பதே நால்வர் திருவுள்ளம். அவ்வுண்மை வரும் திருமுறைத் திருப்பாட்டாற் காண்க:

அந்தண் சோற்றுத் துறையெம் மாதியைச்
சிந்தை செய்ம்மின் அடியா ராயினீர்
சந்தம் பரவு ஞான சம்பந்தன்
வந்த வாறே புனைதல் வழிபாடே.　　—க. உஅ. கக.

சண்டுச் சம்பந்தன் என்பது ஆகுபெயரால் அவரால் அருளிச் செய்யப்பெற்ற திருமுறையைக் குறிப்பதாகும். திருமுறையில் வந்தவாறே ஓதித் திருமுழுக்கு முதலிய சிறப்புச் செய்து வழிபடுவதே செந்நெறி வழிபாடாகும் என்க.

எல்லாச் செயற்கும் இயம்புமறை ஐந்தெழுத்தே
வல்ல **சிவயநம** வாழ்த்து.

என்பதை நினைவு கொள்ளுவோமாக.

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை யாள்வன
செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்
கந்தியுண் மந்திரம் அஞ்செ ழுத்துமே. —௩. உஉ - உ.

என்னும் ஆளுடைய பிள்ளையார் அருண்மொழியால் திருவைந்தெழுத்தே எல்லார்க்கும் எல்லாச் செயற்கும் மறைக்குள் நின்றுய்க்கும் உயிர்மறை என்பது தானே போதரும்.

அருச்சனை

வழிபாட்டுக்கே பெயராகிய அருச்சனை அதன் உறுப்பாகிய மலர்தூவிப் போற்றுதற்குக் காரண இடுகுறியாகும். அருச்சனை தமிழில் நடந்த முறை திருமுறைக் காலத்துக்கு முன்னும், திருமுறைக் காலத்தும், சேக்கிழார் காலத்தும் இருந்ததென்பது வெளிப்படை. பின் கொற்றவன்குடி உமாபதி சிவனார் காலத்தும் தமிழருச்சனையே நிலவிற்று என்பது உறுதி என்னை? அவர் பாடியருளிய சேக்கிழார் திருவரலாற்றில் 'திருத்தொண்டர் புராணத் திருமுறையை மறையவர் சிவமூலமந்திரத்தால் அருச்சனைசெய் திறைஞ்சினர்' எனக் கிளந்தெடுத்துரைத்தருளினர். சிவமூல மந்திரம் செந்தமிழாம் **சிவயநம** என்க.

சேக்கிழார் அடிகள் தடுத்தாட்கொண்ட புராணத்து 'அருச்சனை பாட்டேயாகும்' என்று அருளினர். அகத்தியர் சிவாலயமுனிவர்க்குத் திரட்டிக்கொடுத்தருளிய தேவாரத்திரட்டில் "பந்து, வேற்று, கொன்றிவை மூன்றும், நந்தலில் அருச்சனை நாட்டிய தாகும்" என்றருளினர். இந்த முறையான் தமிழகத்திருக்கோவில்களில் தமிழிலேயே அருச்சனை நடந்துள்ளதென்பது தெளிவு. இவ்வுண்மை மூவர் அருளிச்செய்துள்ள திருமுறைகளினின்றும அருச்சனைக்கென்று திரட்டிய திருப்பதிகங்கள் 'போற்றுதுமே' 'போற்றி' என்னும் தமிழ் முடிபினையுடையனவாகக் காணப்படுவதனாலும் விளங்கும். போற்றித் திருத்தாண்டகம் ஐந்துள்ளன. அவ்வைந்தனுள் 'கற்றவர்களுண்ணும் கனியே போற்றி' என்னும் திருப்பதிகம் நூற்றெட்டுப் போற்றிகளைத் தன்னகத்துக் கொண்டதாகக் காணப்படுகின்றது. இஃதுடம்பொடு புணர்த்தலென்னும் முறையான் மலர்தூவிப் போற்றுதலாகிய அருச்சனை 'போற்றி'த்தொடரிலேயே இருத்தல்வேண்டும் என்பதும் பெறப்படும். பெறப்படவே முதலும் முடிவும் ஓம் நம எனக் கூறப்படும் அயன்மொழியார் வழக்கம் செந்தமிழர்க்கு வேண்டுவதின்றென்பதும் பெறப்படும். திருவாசகத்தின்கண் சிவபுராண முதலியவற்றில்

இடையிடையே போற்றித்தொடர் காணப்படுவது மட்டுமன்றிப் போற்றித்திருத்தாண்டகம் போன்று ‘போற்றித்திருவகவல்’ என்று தனியே ஒரு திருவகவலும் உள்ளது. ஏனைய திருமுறைகளிலும் ஆங்காங்குக் காணப்படும் போற்றித்தொடர்கள் அளப்பில.

புரியுமொழி

வழிபாடு வழிபடுவார்க்குப் புரியுமொழியிலேயேதான் இருத்தலவேண்டும் என்பது செந்நெறி முதல்வர்களாகிய நால்வர் திருவுள்ளம். அந்தச் செல்வர்கள் பாடியருளிய திருமுறைகள் எல்லாம் செந்தமிழ்மொழியில் திகழ்வனவே சான்றாம். ஒவ்வொருவருக்கும் அவரவர்தம் தாய்மொழியேதான் எளிதில் புரியும். அம்மட்டோ செந்தமிழ் வழங்காத நாட்டில் திருமுறைகள் ஓதுவது ஆங்குள்ள அயன்மொழி மக்களுக்குப் பயன்தாராதென்ற திருவுளங்கொண்டே ஆளுடைய பிள்ளையார் முதலிய செந்நெறி முதல்வர்கள் திருக்காளத்தித்திருமலை சென்றதும் அதன் வடபாலும் மேல்பாலும் அருந்தமிழ் வழக்கம் நிகழாமையாலும், சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருக்கோவில்களையெல்லாம் பாடல்வேண்டுமென்னும் கடப்பாட்டினாலும் திருக்காளத்தி மலையினின்றே அத்திருக்கோவில்களுக்குத திருமுறை பாடியருளினர். இம்முறைமையினை உடம்பொடு புணர்த்தலாகக் கொண்டு நோக்கின் தமிழ் வழங்கும் எல்லையில் அயன்மொழியால் வழிபாடு செய்வதும் செய்விப்பதும் அவர்கள் திருவுள்ளக் கருத்துக்கு முற்றும் மாறுபட்டதென்பது தானே விளங்கும.

தமிழ் வழங்குமு எல்லையில் தமிழ்மொழி புரியாது அவ்வயன்மொழி மட்டும் புரியும் அன்பர்கள் உளரேல் அவர் பொருட்டு அவ்வயன்மொழியாற் செய்வது ஏற்புடைத்தேயாம். நமக்குத் தெரிந்த மட்டில் தமிழகத்தில் தமிழ்மொழி புரியாதார் எவருமிலர். அவ்வயன்மொழி புரிபவர் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரே. அச்சிலர்தாமும் வீட்டிலும நாட்டிலும் குடும்பத்தாருடனும் பிறருடனும பேசுவதும் எழுதுவதும் தமிழே. தமிழகத்தில் அயன்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு நீண்டநாளாக வாழும வடுகர், மலையாளர், கன்னடியர், மராட்டியர், சௌராட்டிரர், பட்டாணியர், (அண்மையில் வந்த) ஆங்கிலோ இந்தியர் அனைவர்களும் தாய்மொழிப் பெரும்பற்றினால் அவரவர்களுக்குள் அவ்வம்மொழிகளைப பேசிக்கொண்டாலும் தமிழகத்தாரனைவருடனும் தமிழ்மொழியிலேயே தான் பேசியும் எழுதியும் வருகின்றார்கள். தமிழ்மொழி வழங்காத திருக்கோவில்கள் ஒருசில அம்முதல்வர்கள் காலத்துத் தமிழக

எல்லையின் வெளியிலிருந்தன. அந்தோ இக்காலத்தோ தமிழகத்துள்ளேயே இருக்குமா காண்கின்றோம். இஃதென்ன காலக்கொடுமையா! கோலமயக்கா! இக்கொடுமை நன்னெறி முதல்வர் நால்வரைப் பின்பற்றும் செந்நெறியாளர்கட்கு அடுக்குமா? இவர்களும் திருமுறைச் செல்வர்களாவரோ? நினைமின், நினைமின். தமிழ்மொழியைத் தாய்மொழியாகக்கொண்ட ஒருவர் வடுகர் முதலிய அயன்மொழியாளர் இல்லம் சென்றால் அவர்கள் குடும்பத்தாருள் பேசிக்கொள்ளும் அயன்மொழியைக் கேட்டும் புரியாமையால் செவிடராய், விடைசொல்ல முடியாமையால் ஊமராய், பகுத்துக்காணமுடியாமையால் விலங்கொத்தவராய் விளங்குகின்றனர்.

அதுபோலவேதான் செந்தமிழின் செம்மையோர் தமிழகத்திருக்கோவிலுக்குச் சென்றால் ஆங்குச் செய்யப்படும் அருச்சனையோ வழிபாடோ அயன்மொழியிலிருப்பதால் செவிடராய் ஊமராய் விலங்கராய் விழிக்கின்றனர். அம்மட்டோ? சித்தாந்த சைவத்துக்கு முற்றும்மாறான சாதிக்கொடுமை சாற்றி இறைவனுக்குச் செய்யும் படைப்புக்களைக் காண்டல் கூடாதென்று திரையிட்டுக் குருடருமாக்கி வருகின்றனர். ஆண்டவன்மக்களாகிய அனைவரும் அவன் உண்டருளும் படைப்பைக்காண்டற்குரிமையின்றென்பது எத்துணைக்கொடுமை. தேங்காய் பழம் முதலிய படைப்பு படைப்புக்கள் அன்றோ! அவைகளைக் காணலாமாயின் ஏனையவற்றை ஏன் காண்டல் கூடாது? அவை செயற்கைப்படாதவெனின், வெல்லக்கட்டி செயற்கைப்பட்டதன்றோ? அவற்றைக் காண்டல் கூடுமா? இவையெல்லாம் போலிக்கொள்கையும், மக்களைப் பிரித்தொதுக்கும் பொருந்தாக் கொடுமையுமாவன. இக்கொடுமையாலேயே சித்தாந்த சைவத்துக்கு வடுவும், தமிழகத்துப் பாழ்ங்கொள்கை பரவுதலுக்கு வாயிலும் ஆயின.

தாலி

திருமுறைகள் முற்றும் பொன்னணியொத்துத் தமிழ் மந்திரங்களே. அவற்றுள் திருவைந்தெழுத்தென்பது அப்பொன்னணியுள் தாலியொத்துத் தலைமை சான்றது. ஏனைய மொழிகள் அங்ஙனமன்று. சிறப்பாக வடமொழியும் அன்னதே. அவைகள் பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, அரக்கு, சங்கு, பளிங்கு, கண்ணாடி முதலியவற்றான் விரவிய அணிகளைக் கொண்டன. அவற்றுள் மந்திரங்கள் பொன்னணிகளையொத்தன. இவ்வுண்மை வரும் நிகழ்ச்சிகளை நடுநின்றாய்வார்க்கு நன்கெளிதிற் புலனாகும்:

குச்சகமுனிவர் மகன் கவுச்சிகர். அவர்செய் அருந்தவப் பேற்றால் மிருகண்டுயோர் எனத் திருப்பெயர் பெற்றார். அவர்தம் மனைவியார் பெயர் விருத்தை. இவ்வம்மையார்தம்மைப் பெண் பேசிக் குச்சகமுனிவர் சென்றனர். பெண்ணை யீன்றாரும் இணங்கினர். மணத்தின்முன் அப்பெண் மதயானையால் துரத் துண்ணப்பட்டுப் பாழ்ங்கிணற்றின் வீழ்ந்துமாண்டாள். யாவரும் புலம்பினர். குச்சகமுனிவர் அவ்வுடலை எண்ணெய்த்தோணி யில் மூழ்குவித்தனர். பின் கூற்றுமறையினைப் பல்கால் எண்ணி னர். கூற்று மறையினை மிருத்துஞ்சயம் என்பர். அதன்பின் அப்பெண் உயிர்பெற்றெழுந்தது. இம்மறையினை எண்ணுவ தற்குமுன் அப்பெண்ணுக்கு இச்சாவு இடைச்சாவா என்றும் ஆய்ந்தனர். இவ்வரலாறு கந்தபுராணத்து மார்க்கண்டேயப் படலத்துள்ளது. இத்தகைய குறிப்பிட்ட பொன்னணி போன்ற மந்திரங்களே வடமொழியின்கண் உள்ளன. இவை போலன்று திருமுறை. திருமுறை முற்றும் முதல்வர் ஆணை யாம் மந்திரங்களே.

திருத்தொண்டர் புராணத்துத் திருமணத்துக்காகக் காத லொருமித்துக் கால்நடையாக வந்த வணிகப்பெண்ணும் வணி கனும் திருமருகல் திருக்கோவிலில் இரவு தங்கினர். வணிகன் பாம்பால் மாண்டனன். அப்பெண் ஆண்டவனை நோக்கிப் புலம் பினள். சம்பந்தப்பெருமான் அருள்கூர்ந்து அப்பொழுதே "சடையாயெனுமால் சரணீ யெனுமால்" எனும் திருப்பதிகம் பாடியருளி வணிகனை உயிர்ப்பித்தனர். இதனால் திருமுறைக்கண் காணப்பெறும் ஒவ்வோர் எழுத்தும் மறையே யாம். ஈண்டு மறை என்பது அருண்மொழி முதல்வர் ஆணைமொழி பற்றி என்க.

மேலும் சேந்தனார் பாடியருளிய ஒன்பதாம் திருமுறைப் பல்லாண்டென்னும் திருப்பதிகம், தில்லைத்தேரினை இழுப்பார் இளைத்தொழிந்தபோழ்து யாருமின்றி அத்தேரினை நிற்கும் நிலை யினின்றும் எழச்செய்து, தெருச்சுற்றி நிலைவந்துசேர அருளிற்று.

உமாபதிசிவனார் அருளியகொடிக்கவி எவ்விதத் தனிமறையு மின்றித் தமிழ்ப்பாடல் முழுவதும் மறையேயாய்த் தில்லைக்கொடி யினை ஏற்றுவித்தருளியது உலகறிந்த மறுக்கப்படாவுண்மை. வடமொழிப் பற்றினர் தனித்தனிமறை—மந்திரம் வேண்டு மென்று சாற்றுவது செந்தமிழர்க்கன்று. இவ்வுண்மை சகலா கம பண்டிதர் மிகச்சிறந்த சிவதீக்கைக்கண் உடலுறுப்புத் தீண்டற்கு அஞ்செழுத்தே அமையுமென்று ஆணையருளினமை யால் நன்கு விளங்கும். அவ்வாணைக்குப்பின்னும் நம்மவர்

அவ்வழியொழுகுகின்றனரா? இன்று, இன்று. இதுவா சிந்தாந்த சைவர்க்கு அழகு? அத்திருப்பாட்டு வருமாறு :—

அஞ்செழுத்தா லான்மாவை அரனுடைய பரிசும்
 அரனுருவும் அஞ்செழுத்தால் அமைந்தமையும் அறிந்திட்டு
அஞ்செழுத்தால் அங்ககர நியாசம் பண்ணி
 ஆன்மாவின் அஞ்செழுத்தால் இதயத் தர்ச்சித்து
அஞ்செழுத்தால் குண்டலியின் அனலை ஓம்பி
 அணைவரிய கோதண்டம் அணைந்தருளின் வழிநின்று
அஞ்செழுத்தை விதிப்படியுச் சரிக்கமதி அருக்கன்
 அணைஅரவம் போல்தோன்றும் ஆன்மாவில் அரனே.

சித்தியார். ௯ - ௩ - அ.

ஆகமம்

திருக்கோவில் வழிபாடுகள் அனைத்தும் ஆகமமுறைப்படியன்றோ நிகழ்கின்றன. அவ்வாகமம் தமிழில் இல்லையே யென மருளுரை உரைத்து மருட்டுவர் வெருட்டுவர். அவற்றிற்கெல்லாம் உண்மைச் செந்தமிழர் மயங்கார் தியங்கார் மருளார் வெருளார். என்னை? முழுமுதற் சிவபெருமானே திருவுளங்கொண்டு திருமூலரைப் பிறப்பித்துச் செந்தமிழாகமம் சேர்ப்பித்தருளினன். இவ்வுண்மை வரும் திருமந்திரங்களான் உணர்க :

பின்னைநின் றென்னே பிறவி பெறுவது
முன்னைநன் றாக முயல்தவஞ் செய்கிலர்
என்னைநன் றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே. —௧0-அக.

நந்தி இணையடி நான்தலை மேற்கொண்டு
புந்தியின் உள்ளே புகப்பெய்து போற்றிசெய்
தந்தி மதிபுனை அரனடி நாடொறுஞ்
சிந்தைசெய் தாகமஞ் செப்பலுற் றேனே. —௧0-எஅ.

மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது
காலை எழுந்து கருத்தறிந் தோதிடின்
ஞாலத் தலைவனை நண்ணுவ ரன்றே. —௧0-௯௯.

தமிழாகமத்துக்குத் துணையாய்க் கருவியும் விளக்கமும் வேண்டுமேல் வடமொழி யாகமத்தினின்றும் மொழிபெயர்த்துக் கொள்வதே வாய்ப்புடைத்தாகும். அங்ஙனம் செய்வதற்கு வாயில் திருமூல நாயனார் செந்தமிழாகமம் செப்பியருளியதே சான்றும் என்க. இதனால் சித்தாந்தச் செல்வர்க்குத் திருமூலர் தமிழாகமமே எல்லா நிகழ்ச்சிகளுக்கும் சால்புடைத் தென்க.

அவரவர் தாய்மொழி நீண்டு தொடருமென்பது 'ஒருமைக் கண் தாங்கற்ற கல்வி ஒருவற், கெழுமையும் ஏமாப் புடைத்து." (நடகூஅ) என்னும் செந்தமிழ்த் தெய்வப் பொதுமறையாம் திருவள்ளுவர் திருக்குறளான் நன்குணரப்படும். அதனாலன்றே ஆருயிர்மக்கள் தெய்வயாக்கையைப் பெற்றகாலத்தும் தம் தாய்மொழித்தொடர்போ டிருக்கின்றனர். இவ்வுண்மை எல்லா மொழியானும் இமையோர் தொழுதேத்துவர் என்பதனால் பெறப்படும். அது வருமாறு.

"கல்லான் நிழன்மேய கறைசேர் கண்டாவென்
றெல்லா மொழியாலு மிமையோர் தொழுதேத்த
வில்லா லரண்மூன்றும் வெந்து விழவெய்த
நல்லா னமையாள்வான் நல்லம் நகரானே."　　—க. அடு-க.

இன்னும் அளவிறந்த சான்றுகள் திருமுறைக்கண் காணலாம். விரிக்கிற் பெருகும். ஆண்டுக் கண்டுகொள்க. இதுகாறும் கூறியவாற்றால் செந்தமிழகத்துச் சிறக்கும் திருக்கோவில் பெருமையனைத்தும் திருமுறைச் சார்பால் வந்தன. அதனை மறந்து ஒழுகுவது திருவருளையும் செய்ந்நன்றியையும் மறந்த செயலினை ஒக்குமென்று கூறுவது நடுநிலையாளர்க் கெல்லாம் உடன்பாடேயாம். தமிழருச்சனை செய்யத்துணையாய் நம் கழகத்தினின்றும் 'மலர்வழி பாட்டு வரிசை' முதலிய திருமுறை நூல்கள் பல வெளிவந்துள்ளன, வந்துகொண்டிருக்கின்றன. இவ்வுண்மையை அல்லும் பகலும் அகத்தும் புறத்தும் ஒல்லும் வகை ஓவாது உழைத்துப் பண்டேபோல் சித்தாந்த சைவத்தை உய்விப்பதே தம்முயிரெனத் தொண்டு பூண்டொழுகும் சிவத்திரு குன்றக்குடி அடிகளார் அண்மையில் நிகழ்த்திய அம்பாசமுத்திர விரிவுரை அருண்மொழிக்கண்ணும் குறிப்பிட்டருளினர். அடிகளார் பெருநோக்கத்துக்குப் பேராதரவு தமிழகத்தும், இலங்கை, மலேயா, சிங்கப்பூர், பர்மா முதலிய கடல்கடந்த வெளிநாட்டகத்தும் உண்டு. அஃது இன்னும் வளர்ந்து எல்லையின்றி விரிதல்வேண்டும். கடவுள் அருள்வானாக.

முதன்மை

திருக்கோவில்களில் நடக்கும் நாள்விழா, சிறப்பு விழாக்களுக்கு அவ்வந்நாட்டுப் பெருமக்களும் தனித்தனி விழா உரிமையாளரும் முதல்வராவர். நாடொறும் நிகழ்த்தும் அருச்சனைக்கு அவ்வவ் வருச்சனையாளரே முதல்வராவர். முதல்வரெனினும் கருத்தா எனினும் ஒன்றே. முதல்வர் ஏவலே முதல்வர் கருத்தறிந் தியற்றுவதே இயற்றுவோர் கடமையாகும். கோவில் அருச்சகர் இயற்றுவோரே யன்றி வேறல்லர். இவ்

வுண்மை, விழா அருச்சனை முதலியன புரியத்தொடங்கும் துவக்கத்தில் உரிமையாளர்பால் ஆணை பெறுதலும், முடிவில் இறைவன்பால் வேண்டிக் கோடலும், வாழ்த்துதலும் கூர்ந்து நோக்குவார்க்கு நன்கு விளங்கும். மேலும் அருச்சகர் செய்யும் செயற்குக் கூலிபெறுவதும் அவர்கள் முதல்வரல்லர் என்பதைக் காட்டும். ஆணையை அநுஞை என்பர். ஆணையெனினும் கட்டளை எனினும் ஒன்றே. இவ்வுண்மை இன்றும் திருச்செந்தூரில் வழிபடுவோர் ஏவலை இயற்றுவோர் கட்டளையர் என்று அழைக்கப்படுதலும், ஏவுவோரை அவ்வையர்மாருள்ளிட்ட அனைவரும் கட்டளைக்காரர் என்று அழைப்பதும் வழக்கத்தில் காணலாம். இதனை உற்றுநோக்கின் முன்னுள்ளார் முறைதிறம்பா தொழுகினர் என்பது விளங்கும்.

தனித்தமிழ் மறையுண்மை வரும் திருப்பாட்டுக்களான் நன்கு விளங்கும்:

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப. —தொல். பொருள். ௪௮௦.

மந்திரப் பொருள்வயி னாஅ குநவும். —தொல். சொல். ௪௪௧.

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். —திருக்குறள், ௨௮.

பாலைநெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதும்
காலனையன் றேவிக் கராங்கொண்ட—பாலன்
மரணந் தவிர்த்ததுவு மற்றவர்க்கு நந்தம்
கரணம்போ லல்லாமை காண். —திருக்களிறு. ௧௨.

செந்தமிழ்த்திறம் வல்லிரோசெங்க ணரவமுன்கையி லாடவே
வந்துநிற்குமி தென்கொலோபலி மாற்றமாட்டோ மிடகிலோம்
பைந்தண்மா மலருந்துசோலைகள் கந்தநாறுபைஞ் ஞீலியீர்
அந்திவானமு மேனியோசொலு மாரணீய விடங்கரே.
—எ. ௩௬ - ௪.

தொன்மைத் தமிழருச்சனை தொடர்ந்து ஓங்குக, செந்தமிழும் சிவனெறியும் செழித்து வாழ்க.

“தென்றில்லை மன்றினுள் ஆடி போற்றி
இன்றெனக் காரமு தானாய் போற்றி.”

திருச்சிற்றம்பலம்

மெய்ப்பொருள்நாயனுர்

[செல்லூர்க்கிழார், திரு. செ. ரெ. இராமசாமிபிள்ளை]

உலகில் எண்ணற்ற உயிர்வகைகள் தோன்றுகின்றன; வளர்கின்றன; முதிர்கின்றன; இறக்கின்றன. இது நாம் உலகில் ஒவ்வொரு நாளும் கண்டுவரும உண்மையாகும். அவ்வுயிருள், மக்களுடம்பு பெற்றனவே சிறந்தனவாகும். ஏனெனின்? எவ்வகை உயிர்களும் உலகில் தோன்றி உண்பது, தின்பது, உறங்குவது, உலவுவது, பெண்ணினத்தோடு கூடுவது, இன்பந் துய்ப்பது, இறப்பதென்பதோடு முடிகின்றன. இவைகளையே மக்கட் பிறவி பெற்ற ஒருவன் செய்வானுனல் அவன் வேறுயிர்களினின்றும் எவ்வாறு விலக்கப்பெறுவான்? ஆகலான், இவைகளினும் மேம்பட்ட மனனுணர்வுகொண்ட உயிருடையோனே சிறந்தவனுகப் போற்றப் பெறுகின்ருன். அம்மனனுணர்வு, தனக்கு வரும் துன்பம்போல் வேறு உயிர்கட்கு வருங்காற் கண்டு இரக்கங் கொள்வது, பிறர்க்குத் துன்பம் வந்தகாலத்து உதவிசெய்வது, காலந்தோறும் நன்மை செய்வது போன்ற செயற்கரிய செய்கின்ற திறமேயாகும். இவைகளினும் சிறந்தது, தமக்குக் கேடு செய்தவர்க்குத் தாமும் கேடு செய்யாது, அவர் கேடு செய்தது, அவர்தம் அறியாத தன்மையேயென்று இரக்கங் கொண்டு அவர்க்கு நன்மை செய்தலேயாகும். எற்ருல் இஃது அதனினும் உயர்ந்ததெனின்? தமக்குத் துன்பம் வந்தகாலத்து இடையூறு நேர்ந்தபோது, அதைப் பொறுக்கலாற்ருது, அதை விலக்க முற்படுதலும், அத்தீமை செய்தவர்களை ஒறுத்தலும் இயற்கையாக எல்லா வுயிர்களிடத்தும் காணப்பெறும் நிகழ்ச்சியாகும். பாம்பு, தேள் முதலிய நச்சுயிர்கள், தமக்கு இடையூறு தருபவைகளினின்றும் விடுபடவே கடிக்கின்றன; கொட்டுகின்றன. இவ்வுயிர்களைப் போன்றே மக்களும் இருப்பாராயின் இவ்வுயிர்கட்கும் இவர்கட்கும் உருவ வேறுபாடன்றி அறிவில் வேறுபாடு சிறிதும் காணப்படுதல் இல்லையன்றே? ஆகவே, தந்நலந் துறந்து பிறநலம் பேணுபவரே சிறந்தவராக எல்லா நாட்டினும் போற்றப்பெறுகின்றனர். இவரையே பெரியோர் - சிறந்தோரென உலகம் கட்டுரைத்துப் போற்றுகின்றது.

[1] ‘செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்’

என்பதும்,

---

1. திருக்குறள் : உசு.

[1] 'இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்'

என்பதும் வள்ளுவர் கண்ட உண்மை.

இவ்வுண்மைக்கு எடுத்துக்காட்டாகப் பண்டும் இன்றும் பலர் இருந்தனர்; இருக்கின்றனர். அவருள் இத்தலைப்புப் பொருளாக வரும் மெய்ப்பொருளாரும், கிறித்துபெருமானும், சிரத்தானந்தரும் தற்காலப் பெரியவராக இலகிய காந்தியடிகளும் சிறப்பாகக் கொள்ளற்குரியர்.

இவருள், கிறித்துபெருமான், தமக்குக் கொடியர்கள், வசைமொழி புகன்றும் காறி உமிழ்ந்தும், முள்முடிசூட்டி அடித்தும், ஒறுத்தும், இறுதியில் சிலுவைமரத்தில் போட்டு அறைந்தும் கொடுங்கொலைசெய்து செந்நீர் யாறுகத் தம் உடலினின்றும் வழிந்தொழியும்போதும் தமக்காகச் சிறிதும் வருத்தங் கொள்ளாது, அக் கொடியர்கட்கு இரங்கி ஆண்டவனை நோக்கி,

'ஆண்டவனே! இவர்கள் நன்மை தீமை அறியாதவர்களாக இருக்கின்றனர்; இவர்கள் செய்வதிது, செய்யாத திதுவெனப் பகுத்தறியும் ஆற்றலில்லாதவர்களாகவும் இருக்கின்றனர்; இவர்கள் பாவத்தை மன்னியும்'

என்று வேண்டுவாராயின், இவர்தம் உள்ளப்பண்பை எவ்வாறு புகழ்வது! அதனால் இவரைச் செயற்கரிய செய்த பெரியாராக உலகம் போற்றுதலாயிற்று.

சிரத்தானந்தர் என்பார், அண்மையில் விளங்கிய பெரியார்; இவரால் பல முகம்மதியர் இந்துசமயநெறிக்குக் கொணரப் பட்டனர்; இவர், கேட்போர் மனங்கொள்ளுமாறு எடுத்து விளக்கிப் பேசும் பேராற்றல் பெற்றவர்; சொல்லின் செல்வர்; அதனன், இவர் அருளுரை கேட்டு முகம்மதிய உலகும், இவர் வழி கால்கொள்ளலாயிற்று. இதைக் கண்டான் முகம்மதிய இளைஞன் ஒருவன்; அப்துல் ரசீத் என்னும் பெயரினன். இவரால் நம் இசுலாமியம் தொலைந்தொழியுமென எண்ணினன்; அஞ்சினன்; அடிகளார் பல்லாயிரக்கணக்கான மக்கள் குழுமிய ஒரு பெருங்கூட்ட நடுவண் சொற்பொழிவாற்றிக்கொண்டிருக்கும்போது கொலைக்கருவி கொண்டு சுட்டான்; அடிகள் செந்நீரொழுகக் கீழே வீழ்ந்தார்; கூட்டத்தை நோக்கி, 'இந்நண்பரை ஒன்றுஞ் செய்யாதீர்; அவரைக் காப்பாற்றுங்கள்' என்று கூறித தம் உயிர்நீத்தார். இப் பெரியாரின் குறிக்கோள் யாண்டுச்சென்றது! தம்மைக்கொன்ற இளைஞன் உயிரைக் காத்தற்

1. திருக்குறள்: உகூ.

கன்றோ! என்னே ஆனந்தர் அருள்! ஆகவே, இவரும் செயற்கரிய செய்த சீரியரானர்.

காந்தியடிகளை இக்கால உலகம் நன்கறியும். தொழுதற் கூட்டத்தில் அவரை முதற்கண் சுட்ட ஒருவனை ஒறுக்காது காக்க வேண்டினர்; அவனைக் காத்தனர்; பின்னர்க் கோட்சே என்னும் கொடியோன் சுட்டனன்; 'அரே! ராம்' என கூறிக் கொண்டு உணர்விழந்த நிலையில் வீழ்ந்தார்; உயிர் துறந்தார். உணர்வோடிருப்பரேல் அவனையும் காக்க முற்படுவர். ஆகவே, இவரும் பெரியாருட் பெரியாராகப் போற்றப்பட்டார்.

இத்தகைய பேரருளாளரே இங்கே யாம் எடுத்துக்கொண்ட தலைப்பில் வரும் மெய்ப்பொருள் நாயனர். இவர் சேக்கிழார் தொண்டர்புராணத்துள் அறுபான்மும்மை அடியார்களில் ஒருவர். செயற்கரிய செய்த பெரியார். தம் உயிர்துறக்க நேர்ந்த காலத்தும் தம் தன்மைமாருத் தகையர்; இவர் அரசரே ஆயினும் தாம் அரசர் என்னும் தருக்குக் கொள்ளாது அடியார்க்கு அடியாராய் ஒழுகிய அருந்தகையராவர்; இவரை 'வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்' என்று போற்றினர் வன்றொண்டப் பெருந்தகையார்.

இவர், மறைமுதற் பொருள்களெல்லாம் மணிமிடற்றவனே யெங்கும்நிறை பரம்பொருளென்று கூறும் மெய்ம்மையை மெய்யென்றுணர்ந்து பூதிசாதனமே நெறிவீடெனக் கொண்ட சீர்மையர். அதனுன்,

[1] 'அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே'

என்னும் மெய்கண்டார் உரைக்கேற்ப, சிவனடியார் திருவேடங்களையும், அவன் திருக்கோயில்களையும் இறைவனுகக்கொண்டும், அஃதில்லா நிலையை,

[2] 'சிவனடியார்க் கன்பிலாச் சிந்தையே இரும்பு; ஏவல்செய்து நாளும்
அவனடியார் திறத்தொழுகா ஆக்கையே மரம்; செவிகண் ஆதி ஐந்தும்
பவனடியார் இடைச்செலுத்தாப் படிவமே பாவை; மறைபரவும் சைவ
தவநெறியல்லா நெறியே பவநெறி'

எனக் கொண்டொழுகும் பான்மையராய் ஒழுகினமையால்—இந்நெறி ஒன்றே உண்மையெனக்கொண்ட காரணத்தால்-இவர், மெய்ப்பொருளார் என்னும் பெயர் வழங்கப்பெற்றுர். இவர்தம்

1. சிவஞானபோதம் நூற்பா: கஉ.
2. திருவிளை, விருத்தகுமார: கஎ.

அளக்கொணு இறைவன்பாற் கொண்ட பேரன்பை, சேக்கிழார் பெருமான்,

[1] 'அரசியல் நெறியின் வந்த அறநெறி வழாமற் காத்து
வரைநெடுந் தோளால் வென்று மாற்றலர் முனைகள் மாற்றி
உரைதிறம் பாத நீதி ஓங்குநீர் மையினின் மிக்கார்
திரைசெய்நீர்ச் சடையான் அன்பர் வேடமே சிந்தை செய்வார்'

என்று பொற்பொடு போற்றியுரைத்தார்.

இத்தகைய சிறப்பினரான மெய்ப்பொருளார் பால்நினைந் தூட்டும் தாயினுஞ் சாலப் பரியும் அருட்கடலாகிய சிவ பெருமான் திருவடிக்கண் மனம்பதிந்த நீரராய் ஒழுகுநாளில் பகை கிளைத்தது. முத்திநாதன். என்பானோர் சிற்றரசன், இவர்மீது போர்தொடுத்தான்; போர் நீள நிகழ்ந்தது; அவன் படைகளை முறியடித்தார்; அவனைப் புறமுதுகிட்டோடத் துரத்தினர்; அடியார் பணியில் மடம்பட்டோராகத் தோன்றி னும் படையில் மடம்பட்டாரல்லர்; முத்திநாதன் தோற்றமை யால் வெள்கினன்; அவன் நாட்டிலேயே பழிப்புரைக்கும் இடனானன்; அவன் ஒன்றெண்ணினன்; 'இவனைப் படைவலியால் வெல்லல் எளிதன்று; சூழ்ச்சியால் வெல்வதே கூடும்; அதற்கு ஆவன செய்தல் வேண்டு'மென்று கருதினன்; அஃதாவது, இவர்க்கு விருப்பமான துறையில் இவரை ஏமாற்றிக் கொல்லு தல் வேண்டுமென்பது. இவர்க்கு விருப்போ சிவனும் அவன் அடியார்களுமே. ஆகலான் அடியார் போன்று கோலங் கொண்டான். இந்நிலையைச் சேவையர் காவலராகிய சேக்கிழார்,

[2] 'மெய்யெலாம் நீறு பூசி வேணிகள் முடித்துக் கட்டிக்
கையினிற் படைக ரந்த புத்தகக் கவளி ஏந்தி
மைபொதி விளக்கே என்ன மனத்தினுட் கறுப்பு வைத்துப்
பொய்தவ வேடங் கொண்டு புகுந்தனன்'

என்று அவன் கொண்ட பொய்த் தவக்கோலத்தை முடிமுதல் அடிகாறும் ஓவியமாக எழுதிக் காட்டினர். இத்தகைய பொய் வேடப் புனைவோன், சேதியர் பெருமானாகிய மெய்ப்பொருளின் அரண்மனை வாயிலை அணுகினன்.

பொருளார், பள்ளிக்கட்டிலில் துயில்கின்றார். இவன் வாயிற் காவலனைக் கண்டான்; தன் வருகையை அரசனுக்குத் தெரிவிக்குமாறு கூறினன்; காவலன் வழிவிட்டான்; உட் காவலன், தத்தனென்னும் பெயரினன்; 'ஐய! இதுகாலை அரசர் தூங்குகின்றார். தெரிந்து செல்லுதல் வேண்டு'மென்றான்.

1, 2. பெரியபுராணம், மெய்ப் : உ; எ.

அதற்கு வஞ்சன், 'யான் அவர்க்கு உறுதிப்பொருள் உரைக்க வந்துளேன்' என்று கூறிக் கடந்து பள்ளியறை யண்மினான். ஆங்கே காவலரின் மனைவியார் பக்கலில் இருந்தவர், இவனைக் கண்டதும் கீழிறங்கி அரசரைத் துயில்நீக்கி எழுப்பலானார். பக்கலில் வெண்ணீற்றுக் கோலத்தனாய், வேணி முடித்த வித்தகன் போன்று நிற்பக் கண்டு, அகங்குழைந்தார்; மயிர்க்கூச் செறிய வணங்கினார்; அவனை வரவேற்றார். 'மங்கலம் பெருக மற்றென் வாழ்வுவந் தணைந்ததென்ன, இங்கெழுந்தருளப் பெற்றது என்கொலோ?' என்று வினவினார். அதற்கு முத்தி நாதனாகிய பொய்த்தவத்தோன், 'உங்கள் நாயகனார் முன்னம் உரைத்த ஆகமநூல், எங்கும் இல்லாததொன்று கொண்டு வந்தேன் ; இயம்ப' என்று விடையிறுத்தான்.

அப்பால் கரையிகந்த பேரன்புடையராய் மலாடர் கோமகனார், முத்திநாதக் கைத்தவனை நோக்கி, 'பேறெனக்கு இதன் மேல் உண்டோ?' என்றார். 'மாறில் ஆகமத்தை வாசித்து அருள்செய்ய வேண்டு'மென்று கேட்டுக்கொண்டார். கைதவன் 'உன் மனையாள் உண்டிருத்தல் கூடாது; நானும் நீயும் தனியிடத் திருந்து படிக்கும் தகையது' என்றான். அப்பால், அரசர் பெருமகனார், தம் தேவியை அந்தப்புரம் ஏகப் பணித்தார்; அவரும் ஏகினாராக, அரசர், முத்திநாதனை உயர்பீடத்தேற்றி அமர்த்தி, தாம் தரைக்கண் இருந்து அவனைப் பணிந்து 'இனி அருள்செய்யும்' என வேண்டினார்.

அதுகாலைப் புத்தகம் அவிழ்ப்பான் போன்று தான் நினைந்தவாறே அவர் வணங்குங்கால் வாளால் அவர் தலையை வணக்கினான். இதைக் கண்ட வாயிற்காவலனாகிய தத்தன், சினங்கொண்டான்; வாளெடுத்தான்; வஞ்சனை வீசி யெறிய முற்பட்டான்; நிறைத்த செங்குருதிசோர வீழ்கின்ற மெய்ப் பொருளார், நமரெனக் கூறினார் ; அவன் கையைப்பிடித்தார்; தடுத்தார்; நிறுத்தினார்; கீழ்வீழ்ந்தார். தத்தன் அவரை வணங் கினான்; 'யாது நான் செய்கேன்?' என்றான். அதற்கு அவர், 'எம்பிரான் அடியார் போக, மீதிடை விலக்காவண்ணம் கொண்டு போய் விடுநீ' என்றார்.

இவ்வாறாக, இதனையறிந்த மக்கள் யாவரும் திரண்டு போந்தனர்; அரசனைக் கொன்ற இந்தப் பொய்த்தவத்தோனைப் பொன்றுவிப்போமெனக் குழுமினர். தத்தன் அவர்களைத் தடுத்தான்; 'இவனைப் பாதுகாத்து அவன் இருக்குமிடம் சேர்த்து வருமாறு இறைவன தாணை பிறந்தது' என்றான். அது கேட்டு அவர்கள் அஞ்சி அகன்றாராக, அரசர் கட்டளைப்படி வெவ்வினைக் கொடியோனை விட்டுவிட்டு மீண்டு வந்தான்.

இச்செய்தியை அறிதற்கு அவாக்கொண்டு மெய்யுயிர் தாங்கிநின்ற கொற்றவனாரின் முன்னர்ச் சென்று நின்றான், தத்தன். அவர் அவனைப் பார்க்க, அவன், 'செய்தவ வேடங் கொண்டு வென்றவர்க்கு இடையூறின்றி விட்டனன்' என்றான். அதற்குத் தொண்டர்க்குத் தொண்டராம் மன்னர்,

'இன்றெனக்கு ஐயன் செய்தது யார் செய்யவல்லார்' என்று கூறி நிறைபெருங் கருணை கூர்ந்தார். அப்பால் தத்தனை நோக்கி, 'தத்தா அரசியல் ஆயத்தார்க்கும், அழிவுறு காதலார்க்கும் நீ ஒன்று விளம்புக.' அது, 'பரவிய திருநீற்றன்பு பாது காத்துய்ப்பீர்' என்பது. இதைக் கூறி இறைவன் பூங்கழல்களை எண்ணினார்.

தொண்டனார்க்கு இமையப்பாவை துணைவனார் தம்மைக் கண்டவாறு எதிரே நின்று காட்சிதந்தருளினார். இடையறாது இறைவனையே கும்பிட்டுக்கொண்டு வீற்றிருக்கும்பேறு நல்கினார், எம்மிறைவர்.

[1]'திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவன் அங்கே
உருக்கோலி மந்திரத்தால் எனநினையும் அவர்க்கும்
உளன்எங்கும் இலன்இங்கும் உளன்என் பார்க்கும்
விருப்பாய வடிவாகி இந்தனத்தின் எரிபோல்
மந்திரத்தில் வந்துதித்து மிகுஞ்சுரபிக் கெங்கும்
உருக்காண ஒண்ணாத பால்முலைப்பால் விம்மி
ஒழுகுவது போல்வெளிப்பட் டருளுவன்அன் பர்க்கே'

என்று அருணந்தியடிகளார் அருளிச்செய்தவாறு, எவனொருவன் எவ்வெவ் வடிவில் இறைவனை நோக்கி வழிபடுகின்றானோ அவ்வவ் வடிவில் நின்று இறைவன் ஆட்கொண்டருளி உய்விக்கின்றானென்பது. இங்கே மெய்ப்பொருள்நாயனார், சிவபெருமான் திருக்குறிகளான கோயிலையும் தொண்டர்களையுமே உளங்கொண்டு சிவபெருமானாகக் கருதினார். முத்திநாதன், அவர் கருதிய அடியார் திருவுருத் தாங்கினான்; தான் நினைந்தவாறே செயல் செய்து முடித்தான். ஆனால், நாயனார் அக்காலத்துங் கூட அவனைச் சிவனடியார் என்று கருதினாரன்றி வேறு சிறிதும் பகைவனாகவோ—கீழோனாகவோ கருதினாரில்லை. ஆதலால், இறைவன் இவர்க்கு முன்னின்றருளினான். இடையறா இன்ப அன்பைப் பெருக்கினான்.

இவர் வரலாறு, பிறர் எவரின் சிறந்த வரலாற்றுக்கும் மேற்பட்டதாகும். கிறித்துவும், சிரத்தானந்தரும், காந்தியடிகளும்

1. சிவஞான சித்தியார், சுபக்கம், ௧௨-ஆம் சூத்திரம்: ௪.

ஒரே நீர்மையராகக் கொள்ளப்பெறுகின்றார். இவர் அவரினும் விஞ்சியவராய்த் தம் கொள்கையை உலகெங்கும் நிலைக்குமாறு செய்ய ஏவி, தத்தனுக்குக் கட்டளையிட்டு இறையடிப் பேறுற்றாரென்றால், இவர் பெருமை அளவிட்டுரைக்கத்தக்க தன்று; ஆனால் நம்நாடு, பிறநாட்டுக் கதைகளை—வீரர்களைப் போற்றுவதன்றி நம்நாட்டுப் பெரியார்களைப் போற்றுவதில் பின்வாங்கியே நிற்கின்றது.

சங்க காலத்தில் நம் தமிழகத்தில் வாழ்ந்திருந்த புலவர் பெருமக்கள், அரசர்கள், வள்ளல்கள், ஓவியர்களின் வரலாறு கள் யாவும் தெரியாது; தெரிதற்கு வாய்ப்பும் இல்லை; கணியன் கூறிய வாய்மொழிகொண்டு தம் மூத்தோன் அரசு கட்டிலேறி இருக்க விழைந்து தன் நலந்துறந்து, இளங்கோ, இளங்கோவடிக ளாகத் துறவு பூண்டார். இது, தமிழ்மகனுக்கு இன்னுந் தெரி யாது; இலக்குவன் தன் தமையனோடு காட்டுக்குத் தொடர்ந்து சென்றது தெரியும்; சிறையில் வாடி, சங்கிலித் தொடர் கொண்டு விலங்கு பூட்டியதற்கு மனந் தாழாது நீர்வேட்கை மிகுந்தும் நீரருந்தாது மானத்தால் உயிர்விட்ட மானவீரன் சேரமான் கணைக்கால் இரும்பொறை வரலாறு தெரியாது; சூழ்ச்சியால் அபிமன்னுவைப் பல வீரர் கூடிக்கொன்ற பாரதக் கதை தெரியும்; தன் கணவன் கொலைஞன் என்ற பழிச்சொல் தீரச் சிலம்பால் செழியனை வென்ற சேயிழை கண்ணகி வரலாறு சரிவரத் தெரியாது; ஐவருக்கும் அழியாத பத்தினி திரௌபதை கதை தெரியும்; இவ்வாறு நாட்டியல், வரலாற்றியல் தெரியாது தமிழனுக்கு.

இராமகாதை, பாரதக் கதைகள் பொய்யும் புளுகும் புனைந்து கட்டியன. அதில் வரும் கதைப் போக்குகள், தமிழ் நாட்டுக்கும் தமிழர் பண்புக்கும் ஒவ்வாதன. அவைகள் இங்கே போற்றப்படுகின்றன; ஏற்றியுரைக்கப்பெறுகின்றன. ஃ தமிழன், வேற்றுநாட்டுக் கதைவெறி, மொழி மோகம், அடிமை யெண் ணம் இவைகள் மாறி, இவர்போன்ற நல்லார் நெறியை வல்லமை யாகக்கொண்டு நடக்கும் நாளே நன்னாளாகப் பொன்னாளாகப் போற்றப்பெற்று மிளிரும் என்ப தொருதலை.

மன்றுளார் அடியாரவர் வான்புகழ், நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.

தண்டமிழ் வேலி

[சே. சி. சேதுராமலிங்கம்]

அரசியல், நாட்டிற்கும் மக்களுக்கும் இன்றியமையாத தொன்று. மொழி நாகரிகம், பழக்க வழக்கம் முதலியவற்றைத் தமக்குப் பொதுவாகக் கொண்ட ஆறறிவுடைய மக்கள் வாழும் நிலப்பகுதி நாடு எனப்படும். அந்நாடு அம் மக்கள் பேசும் மொழியின் பெயராலோ அல்லது அந்நாட்டில் மிகுதியாகக் காணப்படும் சிறந்த பொருள் ஒன்றின் பெயராலோ அல்லது வேறு யாதானும் ஒரு பெயராலோ அழைக்கப்படும். "வட வேங்கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்" தமிழகம் எனப் பெயர்பெற்றது. நாடு மக்களால் ஆயது. எனவே, நாடு தன்னுடைய உயர்விற்கும் செழிப்பிற்கும் மக்களைச் சார்ந்திருக்கின்றது.

நாட்டுக்கு அணிகலன் அரசியலே. தமிழகத்திற்குத் தமிழ் மக்கள் அளித்த அணிகலன் தமிழ் அரசியலே. தமிழகத்தின் அணிகலனாகிய தமிழ் அரசியல் மிகவும் உயர்ந்த நிலையில் பிறங்குவதற்குக் காரணம் அதனைச் சமைத்த தமிழ் அறிஞர்களின் மனநுட்பமும் ஆக்கத்திறனும் ஆகும். அவ் அணிகலனையும் அதனைச் சமைத்த அறிவும் ஆற்றலும் மிக்குடைய மக்களையும், தமிழகத்தையும், பிற நாட்டாரின் பேராசைப் பிடியிலிருந்தும் அதனால் உளவாகும் இழிசெயல்களிலிருந்தும் காப்பாற்றிப் போற்றுவது தண்டமிழ் வேலியே.

காலப் போக்கிற் கேற்பவும், காவலரின் வினைத்திட்பத்திற் கியையவும் ஒரு நாட்டின் அரசியல் மாற்றமடையும். இது எல்லா நாடுகளுக்கும் பொதுவான ஓர் விதி. அதேபோன்று தமிழக அரசியலும் மக்களின் உயர்வு தாழ்வுகளுக்கேற்ப உயர்ந்தும் தாழ்ந்தும் இதுகாறும் வந்திருக்கின்றது. "ஒரு அரசியல் என்றென்றும் நீடித்திருக்கும் தன்மையதன்று; அதனைத் தோற்றுவித்த மக்களே பின் அதனை மாற்றி யமைத்தலும் கூடும். அல்லது, வலிமையும் வீரமும், செழிப்பும் செல்வமும், உடைய பிற நாட்டாரின் அரசியல் வந்து புகுந்து கொள்ளுதலும் கூடும். எனவே, மக்கள் தங்கள் முன்னேற்றத்திற்கும், உயரிய வாழ்விற்கும் அரசியலை முழுவதுமாகச் சார்ந்திருத்தல் சிறப்புடையதன்று. தங்கள் பாதுகாப்பிற்கும் அரசியலைப் பூரணமாகப் பற்றியிருத்தல் நல்லதன்று. நாட்டுமக்களை ஒன்று கூட்டி, நல்வழியில் செலுத்தி, அவர்களையும் அவர்களது அரசியலையும்

பாதுகாத்துவரும் உரனும் ஊக்கமும் உடையது அவர்கள் வழங்கும் மொழியே. தமிழகத்தைப் பாதுகாக்கும் தன்மையுடையது தமிழ்மொழியே. அத் தமிழ்மொழியே தமிழகத்தின் தண்டமிழ் வேலியாகும். அவ் வேலியை உரனுடையதாக்கிப் பிறர் அழிக்காவண்ணம் வைத்திருப்பது தமிழ்மக்களின், பிறவியெடுத்ததின் முதற்கடமையாகும்'' என்று தெளிவாக, உறுதியாகக் கூறிச் சென்றுள்ளார் நம் தமிழகச் சான்றோர் ஒருவர்.

உலகியல் வாழ்விற்கு இலக்கணம் வகுத்த மொழியாம் தமிழ்மொழியை எங்ஙனம் தண்டமிழ் வேலியாக நிறுவுவது என்று தமிழக மக்களுள் சிலர் திகைத்தல் கூடும். தமிழகத்தில் வாழும் ஆண் பெண் இருபாலாரும் தீந்தமிழின் சுவை மாந்தித் தமிழ் உணர்ச்சி பெற்றுத் தமிழையே தங்கள் உயிர்ப்பாகக் கொண்டு வாழ்ந்தால் தமிழை வேலியாக ஆக்கமுடியும்; அங்ஙனம் வாழ்வதுதான் தண்டமிழ் வேலியின் பாதுகாப்பிலே வாழ்க்கையாக வளமுடன் வாழ்வதாகும். தமிழக மக்கள், தங்கள் தாய்மொழியைப் பேச்சிலும் செயலிலும், கனவிலும் நனவிலும், பயன்படுத்தும்பொழுது அவர்களால் ஆக்கப்பட்ட அரசியலும், அவர்தம் மொழியிலேயே நடைபெற வேண்டியதாயிருக்கின்றது.

இந்தியா விடுதலை பெற்றபின் தமிழறிஞர் சிலர், தமிழ்நாட்டின் அரசியல் தமிழிலேயே நடைபெறல் வேண்டும் என்று உரைத்தனர் தமிழகத்திலே பிறந்திருந்தாலும் தமிழ் உணர்ச்சியற்ற வேறு சிலர் "தமிழ்மொழி அரசியல்மொழியாக வேண்டாம்; இந்திமொழிதான் இந்தியா முழுவதும அரசியல் மொழியாக ஆகும் தகுதியுடையது; அதுதான் அரசியல் மொழியாக இருக்க வேண்டும்'' என்று பறைசாற்றித் திரிகின்றனர் இன்றும். தமிழைத் தமிழகத்தின் அரசியல் மொழியாக்கத் தளரா முயற்சியுடன் அயரா உழைப்பை மேற்கொண்டுள்ளனர் சிலர்; ஏன், தமிழகமக்களில் பெரும்பான்மையோர் அதனை வரவேற்கின்றனர். ஆனால் ஒரு சில மக்கள் மொழிப்பற்று நாட்டுப்பற்று அற்ற மக்கள், தமிழ் அரசியல்மொழியாவதை எதிர்த்தனர்; இப்பொழுது சிறிது மனம் திரும்புகின்றனர்.

"இந்தியக் குடியரசின் கீழ் அடங்கிய பல்வேறு நாடுகளில் அவ் வந்நாட்டு மொழியே அரசியல்மொழியாக வழங்கப்படுமானால் அவ்வந் நாட்டுமக்கள் உணர்ச்சியால் உந்தப்பட்டு இந்தியக் குடியரசினின்றும் பிரிந்து வாழ விரும்புவர். அதனால் இந்தியக்குடியரசு சிறப்பிழந்து விடும். சிறு நாடுகளின் அரசியல்

அந்நாட்டு மக்களின் அரசியலாக இருந்தாலும், இந்தியாவெங்கும் அரசியல் மொழியாக இந்தி இருக்குமாயின் அந்நாடுகள் இக் குடியரசினின்றும் பிரிந்து செல்ல வழியின்று" என்பதனை வடவர் நன்குணர்ந்தவராதல் வேண்டும். அதனாலேயே இந்தி மொழியாகிய வேலிக்குள் இந்தியாவைக் கட்டுப்படுத்த வடவர் பெரிதும முயற்சி எடுத்து வருகின்றனர்.

"'இந்தி மொழியில் விஞ்ஞானத் துறையில் பத்தாயிரம் சொற்கள் ஆக்கப்பட்டிருக்கின்றன.' 'இந்தியை உயர்நிலைப்பள்ளிகளில் கட்டாயமாகப் போதிப்பதற்கு இந்திய அரசாங்கம் பெரும் அளவில் பணம் அளித்துள்ளது' 'மைசூர் மாகாணத்திலுள்ள பள்ளிகளில் இந்தி கட்டாயமாகப் போதிக்கப் படுகிறது.' 'இந்தி மொழியின் சிறப்பினை நாட்டுமக்களுக்கு உணர்த்த அயல் நாடுகளிலிருந்து மொழிநூல் வல்லுநர் பலர் இந்தியாவிற்கு வரவழைக்கப் பட்டிருக்கின்றனர்." என்று இவ்வாறெல்லாம் பத்திரிகைகளிலிருநது நாம் செய்தி அறியலாம். அரசாங்கமேயன்றி வடநாட்டுமக்களே இந்தியைப் பரப்புவதில் பெருமுயற்சி எடுத்து வருவதோடு அதறகாகப் போதுமான பணத்தையும் உதவுகின்றனர்.

ஆனால் தமிழ்மக்கள் ஏதேனும் செய்கின்றனரா? வயிற்றுப் பிழைப்பிற்காகத், தமமை ஆளுவோர் வேற்று நாட்டாராயினும் அவர்தம் நிழலில் தங்குவர் சிலர். ஆங்கிலேயர் ஆட்சியிலே அவர் மொழியைக் கற்று, அவர் மதத்தைத்தழுவி, அவர் நாகரிகத்தை மேற்கொண்டு, தமிழ்ப் பற்று அற்று வாழ்ந்த தமிழகத்திற்றோன்றிய மக்களும் உளர். இந்தியக் குடியரசிலே வடவரின் ஆதிக்கத்திற்குத் கலையை ஆட்டி, அவர் மொழியைக் கற்று, அவர் தம்மைப் போற்றி வாழ விருப்பங்கொள்ளும் மக்களும் தமிழகத்தில் உள்ளனர். இத்தகையோரால் தமிழகம் சிறப்படைவது எங்ஙனம? வேலியைச் சிதைக்கும் விலங்குகளாகவே இவர்கள் தோற்றமளிக்கின்றனர்

'தமிழை அரசியல் மொழியாக ஆக்கியே தீரவேண்டும்' என்று சட்டசபை உறுப்பினர்கள் பலர் முயன்றதன்பேரில், 'தமிழ்மொழியை ஒரு சில மாவட்டங்களில் மட்டும் அரசியல் மொழியாகச் செயல்படுத்தி, அதன் விளைவைக் காணுவோம்' என்று அவ்வாறே அரசியலார் செய்துள்ளனர். அதன விளைவை மிகத் தெளிவாகக் கண்டுள்ளார் தமிழ்ப்பெரியார் ஒருவர். செந்தமிழ் மொழியின் சொற்சிறப்பையும், சங்ககாலத் தமிழ் மக்களின் நல்வாழ்வையும், அரசியலையும் அவர்தம் ஆட்சித் திறனையும் உணராதவர் போன்றும், இந்தி மொழியின் பாலுள்ள தமது மதிப்பு இன்னும் குறையப் பெறாதவர் போன்றும் அவர்

நாளிதழ் வாயிலாகத் தமிழகத்திற்குப் புலப்படுத்துகின்றார். அவர்தம் கூற்றைச் சற்றுக் கவனிப்போம்:

“தமிழ் அரசியல் மொழியாகக் கொள்ளப்பட்ட மாவட்டத்திலிருந்து அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்ட செய்தி ஒன்றில் ‘உரகம்’ என்ற கடினமான தமிழ்ச்சொல் உபயோகிக்கப் பட்டிருந்தது. அரசியல் அலுவலாளர் ‘உரகம்’ என்ற சொல்லின் பொருளை அறிய அகராதியைத் தேடவேண்டியதாயிற்று. ‘உரகம்’ என்று எழுதுவதைவிடப் ‘பாம்பு’ என்றே எழுதியிருக்கலாம். தமிழ் அரசியல் மொழியாவது சரிதான்; ஆனால் நாடோடித் தமிழிலேயே அரசியல் நடைபெறவேண்டும்” என்று கூறியுள்ளார் அப பெரியார்.

இயற்றமிழ், இசைத்தமிழ், கூத்துத்தமிழ் என, தமிழ் மூவகைப்படுமேயன்றி நாடோடித் தமிழ், பட்டணத்துத் தமிழ், கிராமத்துத் தமிழ் என இவ்வாறு பலவகையுடைத்தன்று. நாடோடித் தமிழ் ஆகிய இவற்றிற்குத் தனி இலக்கணமும் கிடையாது. தென் பாண்டி நாட்டில் கிராமங்களிலே உபயோகிக்கப்பட்டுவரும் ‘உலங்கு’ என்னும் சொல் நகரங்களிலே வழங்கப் படுவதன்று: அச் சொல்லைக் கேட்ட நகரவாசிகள் அதற்குப் பொருள் தெரிய அகராதியைத் தேடவேண்டும். ஆனால் அச் சொல் இலக்கியங்களிலே மிகுதியும் எடுத்தாளப்பட்டுள்ளது. மதுரையிலே ‘இட்டிலி சுடுதல்’ என்பர். அதனைக் கேட்கும் திருநெல்வேலியார் சிரிக்கத்தான் செய்வர். ‘வ.யப்பயம்,’ ‘இஸ்து கின்னு’ போன்ற சொற்களை நாடோடித் தமிழ் என்று கொண்டு அரசியல் செய்திகளிலே எழுதினால் சென்னை மக்களைத் தவிர மற்றத் தமிழக மக்கள் அவையிற்றின் பொருளையறிய அகராதியைத் திருப்பி அதிலே காணாமல் தமிழ்ப்புலவர்களைத் தேடிச் செல்லவேண்டும். அவர்களும் யாது பொருளுரைப்பரோ அறியேன். மதுரைக் கடைகளிலே ‘அஸ்கா’ கொடுக்கும்படி கேட்டார் நண்பர் ஒருவர். கடைக்காரச் சிப்பந்தி பொருள் தெரியாமல் விழித்தான். பூவரசு மரத்திலே விளையும் காயைப் ‘பூவரசங்காய்’ என்பது பொருத்தமுடைத்து. ஆனால் அதனைப் ‘பம்பரக்காய்’ என்று ஒரு சில கிராமங்களில் மட்டும் சொல்லுகிறார்கள் சிறுவர் அதனைப் பம்பரம் சுற்றுகின்றனர். அதனால் அக்காய்க்கு அப்பெயர் பொருந்தியது. ‘பம்பரக்காய்’ என்று எழுதினால் அரசியல் அலுவலாளர் பொருள் தெரிந்து கொள்ளுவரா? ஒருகாலும் முடியாது.

அமிழ்தத்தொடு சிறிதளவு தேனைச் சேர்த்தாலும் அமிழ்தத்தின் இயற்கையான சுவை கெட்டுவிடும் என்பது யாவரும்

அறிந்த உண்மை. அதேபோன்று தீந்தமிழுடன் பிறமொழிச் சொற்களையும் கலந்து பேசப்பேசத் தமிழின் சுவை கெடுகின்றது. அதனால் தமிழ், தமிழகத்தில் பல பாகங்களிலும் மக்கள் பேசும் தன்மையைப் பொறுத்துத் தன்னிலையிற் றிரிகின்றது. இங்ஙனம் திரித்துப் பேசப்படும் தமிழைப் பொதுவாகக் 'கொச்சைத் தமிழ்' என்றே கூறவேண்டுமேயன்றி நாட்டோடித் தமிழ் என்றோ, பட்டணத்துத் தமிழ் என்றோ, பட்டிக்காட்டுத் தமிழ் என்றோ சொல்லுவது முறையன்று. ஓரிடத்தில் பேச்சில் வழங்கும் சொல் மற்றோரிடத்தில் இலக்கியத்தில் வழங்கும் செந்தமிழ்ச் சொல்லாகப் பாவிக்கப்படுகின்றது.

இன்றைய தமிழகம் தண்டமிழ் வேலியின் இன்றியமையாமையை உணர்ந்துவிட்டது. அவ் வேலியை எவ்வாற்றானும் நிலைப்படுத்துவதே கடமை என்பதை மக்கள் உணர்ந்து முயற்சி செய்கின்றனர். அவ்வேலி கொச்சைத் தமிழ் என்னும் அகத்திக் கப்பால் நிறுவப்படுமாயின், எளிதில் அழிவெய்தும் என்பது உறுதி. நாட்டையும், நாட்டு மக்களையும் பாதுகாக்கும் வேலி மிகவும் வலிவுடையதாயிருக்க வேண்டும். மக்களின் அரசியல், பொருளாதாரம், வாழ்க்கை, விஞ்ஞானம், கல்வி, கலை ஆகியவற்றின் முன்னேற்றம், சிறப்பு அனைத்தும் தண்டமிழ் வேலியின் வலுவைப் பொறுத்திருக்கின்றன. ஆகவே, தமிழகமக்களாகிய நாம் அனைவரும் செந்தமிழையே கற்று இனிய தமிழையே பேசி வாழ்க்கையில் வெற்றிகாண முயலுவோமாக.

தமிழ்மொழி ஆட்சி

'வானம் அளந்தது அனைத்தும் அளந்த வண்மொழி' யென்று போற்றுகின்றார் பாரதியார். அத்தகைய சீரிய மொழி இன்னும் ஆளும் மொழியாக அமையவில்லை. அதை உரிமையாகக்கொண்ட நம்மக்கள், மந்திரியாவதிலும் தந்திரியாவதிலும் தம் காலத்தைப் போக்குகின்றனர். வேறுமொழி கற்றவன், தகுதியற்றவனாயினும் அவன் அலுவலுக்கு மிகைக் கூலி கொடுக்கின்றனர். தமிழ் கற்றவனுக்குக் கற்ற தகுதிக் கேற்ப நன்மதிப்பு இல்லை; கூலியுமில்லை. இந்த மனப்பான்மை ஒட்டுப் புற்போல் நம் தமிழ்மக்கள்பால் ஒட்டிக் கிடக்கின்றது. இது மாறினால் தமிழ்மொழி முயற்சியின்றியே அரியணையேறி ஆட்சி செலுத்தும். தமிழ் ஓங்குக.

—செல்லூர்க்கிழார்.

மதிப்புரை

(௧) பாலு சகோதரர்களின் கலைக்கூட மலர்

[பக்கங்கள்—௧௬௨, வழுவழுத்த அழகிய தாள், விலை ரூ. 3.]

இம்மலர், ஓவியக் கலைஞர்களான பாலு சகோதரர்களின் கலைக் கண்காட்சி ஓவியங்களும் அவ்வோவியங்களைப்பற்றிய பல பேரறிஞர்களின் அரிய சிறந்த கருத்துக்களும் கொண்டு திகழும் அரிய கருவூலம். மேலுறையில் கூத்தப்பெருமான் திருவுரு திகழ்கின்றது.

இதில் திருக்குறட் பாக்களின் கருத்தோவியங்களும், அகநானூறு புறநானூறு சீவகசிந்தாமணி போன்ற அருங்கலைப் பேழைச் செல்வங்களின் கருத்தோவியங்களும் கண்கவர் வனப்பிற்றாய்த் திகழ்கின்றன. முதற்கண் நம் தமிழகச்சான்றோர் வள்ளுவர் திருவுருவும் உலகப் பெரியார், காந்தியடிகளின் திருவடிவும் இந்தியநாட்டு முதலமைச்சர் நேருவின் திருவுருவவடிவும், நம் சென்னைமாநில முதலமைச்சர் காமராசர் திருவடிவ ஓவியமும் திகழ்கின்றன.

பாலு சகோதரர்களின் கைவண்ணங்கள், கலைக்கதிர் வண்ணங்களாய்—ஓவியமாய்க்—காவியமாய்—இற்றைநாள் தமிழகத் தடத்தில் அரிய மலராய் மலர்ந்து நாடெங்கும் மொழிபெயர் நாடுகளினும்கூட வளத்துடன் கமழ்கின்றன; இது தமிழ்நாட்டின் நற்பேறேயாமென மகிழ்கின்றோம்.

குறளோவியத்தில் 'உள்ளினேன் என்றேன்' என்னும் கருத்தமைந்த பாவுக்குக் காதலன் காதலிகளின் மனத்துன்ப, இன்ப உருக்க நிலைகள் முகத்தினும் கைகால்களின் செயற்பாடுகளிலும் உயிர்க்களையுடன் அமைந்த உருவோவென எண்ணுமாறு திகழ்கின்றன. இன்னும் 'அல்லற்பட்டு ஆற்றாது' என்ற குறட்பாவுக்கும் 'இரந்தும் உயிர்வாழ்தல்' என்ற குறட்பாவுக்கும் 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' என்ற குறட்பாவுக்கும் 'கைவேல் களிற்றொடு' என்ற குறட்பாவுக்கும், இன்னும் இன்னனபோன்ற குறட்பாக்கட்கும் அவ்வக் கருத்து நயங்கள் அவ்வவ் வடிவங்களில் மெய்ப்பாட்டுணர்சசிகள் தோன்ற எழுதிய ஓவியக்காட்சிகள் உள்ளமுருக்கும் உயர்தகையன. இக்கருத்துக்களமைந்த பாக்களை வடித்தெடுத்துக்கொடுத்த அறிஞர்களும் போற்றற்குரியர்; கட்டுரையாளர்களும் நன்மதிப்பிற்குரியர்.

அகநானூற்றுக் களிற்றியானைநிரைப் பகுதியில் இசைக்கு இசைந்து தினைக்கதிர் உண்ணாது உறங்கும் யானை உருவும் அதைப் பரண்மீது நின்று தன் கூந்தல் காற்றில் அவிழ்ந்து தொங்கி உலர நிற்கும் கொடிச்சியின் அழகுருவும் நம் தமிழகச் சான்றோர் நாகரிகப் பண்பை உயர்த்தும் சான்றாக அமைந்துள்ளன. புறத்தில் கொண்ட வாளொடு படுபிணம் பெயர்த்து தன் வீரமகன் இறந்த கிடக்கைகண்டு 'உவகைக் கலுழ்ச்சி' கொள்ளும் வீரத்தாயின் மாண்பும் நம் பழந் தமிழர் உருவ அமைப்பொடு தீட்டியுதவிய பாலு உடன்பிறப்பாளர் கைகளே கைகள்.

இன்னும் திருவாசகத்தேன், சிலப்பதிகாரச் செஞ்சொல், இவைகளைக்காட்டும் ஓவியங்கள் அன்பர்கட்கு அமிழ்தாக இறையன்பில் கூட்டுவிப்பதாகவும் கலைச் சுவைஞர்கட்குக் களிவிருந்தாகவும் அமைந்துள்ளன.

'அல்லையாண்டமைந்த மேனி' எனக் குகன் வாய்மொழியாகக் கம்பர் காட்டும் இராமாயணப்பாட்டுக்கு இராமபிரான் சீதை இவர்கள் புல்லும் கல்லும் பொதுளிய தரைப்படுக்கையில் கண்டுயிலும் காட்சியும், பிறந்தானும் உளனென்னப் பிரியாத இலக்குவன் உறங்காது விழித்தகண் வேல்கொண்டெறியினும் அழித்திமையாது நிற்கும் அன்பும் தறுகண்மையும்கொண்ட உருவ அமைப்பும் 'அஞ்சினள் அஞ்சியன்னம்' என்னும் பாட்டில் அயோத்தியேந்தலை ஆரத்தழுவிக் கொண்ட சீதையின் அன்பின் அகலத்தை அளந்துகாட்டும் ஓவியமும் கண்டவர் கண்ணையும் கருத்தையும் ஈர்த்து ஈர்த்து என்பையும் உருக்கும் நிலையினவாக வுள்ளன.

இன்னும் உலகப் பெரியாராகிய காந்தியடிகளின் வாழ்க்கை ஓவியங்கள், வாளோடு முன்பிறந்த மூத்தகுடியினரான வீரபாண்டியக் கட்டப்பொம்மு, வீரமங்கை முத்துவடிவுபோன்றவர்களின் ஓவியங்களும் பிறவும் கண்கொள்ளாக் காட்சியாகத் திகழ்கின்றன. மீண்டும் நம் தமிழகத் தலைவர்களான, திரு. வி. க; ஈ. வே. ரா; வ. உ. சி; கல்கி போன்றோர்களின் இயற்கை ஓவியங்களும் சிறந்து திகழ்கின்றன.

இத்தகைய அரிய கலைக்காட்சி நிறைந்த ஓவியங்களை நம் தமிழகத்துக்கு—தாம் பிறந்தநாட்டுக்கு—நன்றியாகக்—கடப்பாடாக—உதவிய பாலு உடன்பிறப்பினர் பன்னெடுங்காலம் நெடிது வாழியர் என வாழ்த்துகின்றோம்.

இவர்களால் கலையும் காவியங்களும் ஓவியங்களும் புத்துயிர்பெற்றெழுந்தன என்றால் மிகையாகாது. இவ்வோவியங்களால் கலையே இன்னதென்றுணரவறியாத அறிவுமதுகை பெறாத மக்களும் திருக்குறட் கருத்தை—அகநானூற்று அகத்தை—புறநானூற்றுப் புதுமையை—சிந்தாமணித் திறத்தை—எளிதில் அறிந்து சுவைக்க உதவிய சீரிய சூரியர் எனக்கூறின் அது புகழ்மையாகாது. இவர்கள் இன்னும் இன்னனபோன்ற பாக்களுக்கு ஓவியந்தீட்டின், நம் நாடு கலையும் பண்பும் வீரமும் பெற்று முன்னுள்போல் நன்னாள் இன்பம்பெற்று இலகும்; அவ்வாறே ஓவியம் உருவாக்குவாராக.

இக்கலைஞர்கள் இருவரும் பொற்கோட்டு இமயமும் பொதியமும் போன்று இன்னன தொண்டுகள் பல செய்து சிறந்தொளிர இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

(உ) குறள் நெறி

[ஆசிரியர்: பேராசிரியர் சி. இலக்குவனர், எம். ஏ. எம். ஓ. எல். வெளியிட்டோர்: இலக்கியப்பண்ணை, புதுக்கோட்டை. விலை ரூ. 1-4-0.]

திருக்குறள் உலகப் பொதுநெறி உணர்த்தும் அரிய நூல். அதன் சிறப்பை யெடுத்து விளக்குவதே இந்நூல். நாட்டு இயல், நல் அரசு இயல், கல்வி அறிவுப்பேறு இயல் என மூவகையாக வகுத்துக்கொண்டு நாடு இன்ன நிலையில் இருத்தல்வேண்டும்; அதற்கு நல்லரசு இன்ன நிலையில் அமைதல்வேண்டும்; அங்குக் கல்வியறிவுப்பேறு பெறும் முறை இவ்விவ்வாறு நிகழவேண்டும் என, குறட்பாக்களைக் கொண்டே விளக்கி எழுதியுள்ளனர். எளிய இனிய நடையில் அமைந்த இச் சிறு நூல், திருக்குறளைக் கற்றற்குப் பெருந்துணைபுரியும் அரிய நூலாக அமைந்துள்ளது.

(௬) **உவகை உள்ளம்**

[பக்கங்கள் 90. ஆசிரியர்: சுவாமி பிரான்சிஸ் மோறயீஸ், சேண் பகனூர், மதுரை மாவட்டம். வெளியிட்டோர்: கஸ்தூரி பதிப்பகம், உறையூர்—திருச்சிராப்பள்ளி. விலை ந. 1 8-0]

இந்நூலில் அர்ப்பணம் முதலாக கவிதைத்திறன் ஆய்வு இறுதியாக, சஉ தலைப்புக்களில் சீரிய கூரிய தீஞ்சொல் வளம்நிறைந்த அரிய செந்தமிழ்ப்பாடல்களின் தொகுப்புக்கள் அடங்கியுள்ளன. பாட்டுக்கள் கருத்து நிறைந்தன. ஆனால் பாடல்களில் அல்வழி வேற்றுமைப் புணர்ச்சிகளில் வல்லினம் மிக வேண்டிய இடங்களில் மிகாது இயல்பாக உள்ளது, தமிழ் மரபுக்கு ஒவ்வாதது. வேற்றுச் சொற்களும் வடமொழியெழுத்துக்களும் இடையிடையே வருவது தமிழின் மரபொலிக்கு ஒவ்வாதது. இவைகள் அடுத்த பதிப்பிலாவது திருத்தப் பெறுமென நம்புகின்றோம்.

செய்திகளும் குறிப்புக்களும்

(க) **தமிழ்மொழி வளர்ச்சிக்கு நன்கொடை**

சொல்லின் செல்வராகிய பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள் தாம் எழுதிய 'தமிழின்பம்' என்னும் நூலுக்குப் பாரத அரசினர் ரூ 5000 பரிசாக அளித்தனர். அஃதோடு தாம் ரூ. 10000 சேர்த்து ரூபா பதினையாயிரம் நம் தமிழ்வளர்ச்சிக்காகச் சென்னைப் பல்கலைக் கழகததுக்கு வழங்கியுள்ளனர். ஆசிரியரின் தமிழ்ப் பற்றினைப் பாராட்டுகின்றோம்.

(உ) **தமிழில் அருச்சனைக்கு முட்டுக்கட்டைகள்**

சேலம் குகை திருக்குறட் கழகம் 14 ஆம் ஆண்டு விழா, பேராசிரியர் டாக்டர் திரு. இராசமாணிக்கனூர தலைமையில் 11, 12-6-55-ஆம் நாட்களில் நிகழ்ந்தது பல பேரறிஞர்கள் திருக்குறளின் பெருமை பற்றிச் சொற்பொழிவாற்றினர். அதிற் சொற்பொழிவாற்றிய திருவாசகமணி பாலசுப்பிரமணியம் பேசுங்கால் தமிழில் கோவில்களில் வழிபாடு செய்தலைக் குறித்து, 'அருச்சனை என்பது வடமொழி மந்திரத்துக்கே உரியதென்றும் பிரார்த்தனைதான் தமிழில் இருத்தல் வேண்டுமென்றும் இது வீண்வாதத்தைக் கிளப்பி நாத்திக வளர்ச்சிக்கு உதவி செய்வதாகுமென்றும் கூறியுள்ளனர்.

குறிப்பு: அருச்சனை வடமொழி மந்திரத்துக்கே உரிய தென்கிறார். வடமொழி ஒன்றே மந்திரமொழிக்கு உரியதானல் எல்லா மொழியினரும் வடமொழியிலன்றே மந்திரம் ஓதவேண்டும். பொருள் தெரியாத மொழியில் கூறுவது நல்லதா? பொருள்விளங்கும் மொழியில் கூறுதல் நல்லதா? என்று மணி சிறிது எண்ணிப்பார்க்க வேண்டுகின்றோம்; இவர் நாத்திகத்தை வளர்க்கின்றாரா? தமிழில் வழிபடுவோர் வளர்க்கின்றார்களா? இவர்போன்ற முட்டுக்கட்டைகள்தான் தமிழிசை இயக்கம் வந்தபோது தெலுங்குக்குத்தான் இசை உண்டு; மற்ற மொழிகளுக்கு இல்லையென்று பிதற்றினர். அவ்வாறே இப்போது அருச்சனையை எதிர்க்கின்றனர். மந்திரம் என்பது வெறும் சந்தை இரைச்சல்போன்ற ஒலியல்ல. பொருளுள்ள சொற்கள்தான்.

பொருளற்றதெனப் பணி மயங்கவேண்டா. ஆகவே, வழக்கில் உள்ள மொழியில்—சாவாது நாட்டிலும் ஏட்டிலும் வழங்கும் மொழியில்—அதிலும் செஞ்சொற்றமிழில்—இறைமுன் மலர்தூவி வேண்டுவது குற்றமா? நல்ல கண்கொண்டு ஆராய்ந்து பணி, தமிழ்மொழிக்கு ஆக்கந்தரும் செயலில் ஈடுபட வேண்டுகின்றோம். தமிழ் அருச்சனையை எதிர்க்கும் பிற்போக்காளர்கள் யாவருக்கும் இதுவே தடையற்ற விடை.

(௩) அவ்வந்நாட்டு மொழிகளில் கல்வி கற்பித்தல்

அந்தந்த வட்டாரங்களில் வழங்கும் மொழிகளே பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் மொழியாக இருத்தல் வேண்டுமென்றும் கலைச்சொற்கள் சம்பந்தமாக இரண்டு வெவ்வேறு கருத்துக்கள் தெரிவித்திருப்பதாகவும் வழங்குஞ் சொற்களை அவ்வாறே வைத்துக் கொள்வது; அன்றி அதற்கேற்ற சொற்களை ஆக்கிக்கொள்வதெனை முடிபு செய்து, அதற்கோர் அறிஞர் குழு சென்னை அரசியலார் அமைத்திருக்கின்றனரென்றும் அதற்குச் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் இலட்சுமணசாமி முதலியார் அக்குழுவின் தலைவராக இருப்பாரென்றும் தெரிகின்றது. கல்வி அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் 23-6-55-ஆம் நாள் பல அறிஞர்களின் முன்னிலையில் இது குறித்துக் கலந்து பேசினார்.

குறிப்பு: அரசினர் வட்டார மொழிகளில் கல்வி கற்பிக்க முன்வந்திருப்பதும் கலைச் சொற்களை ஆக்க முன்வந்திருப்பதும் போற்றற்குரியது; இவ்வாறு வருமானால் நம் தமிழ்மொழியும் அரசியல் மொழிகளில் ஒன்றாக மேம்பட்டுத் திகழுமெனை மகிழ்கின்றோம். கலைச்சொற்களை அப்படியே கொள்ளாது தத்தம் மொழிகளில் பெயர்த்துக் கொள்வதே கருத்து விளக்கந் தெரிதற்கு ஏற்ற முறையாகும். பள்ளிகளில் தமிழைக் கொணர்தற்குமுன், ஆட்சிமொழியாகக் கொண்டுவர அரசியலாளரை வேண்டுகின்றோம்.

(௪) இந்திய முதலமைச்சர் நேரு ரஷ்யச் செலவு

இந்திய முதலமைச்சர் பண்டித சவகர்லால் நேரு அவர்கள் 5-6-55-ஆம் நாள் தம் புதல்வி இந்திரா காந்தியுடன் பம்பாயிலிருந்து 'இராணி ஆவ் அசந்தா' என்னும் பெயருடைய வானூர்தியில் சோவியத் ரஷ்யாவுக்குப் புறப்பட்டு செக்கஸ்லவேகிய தலைநகராகிய பிராக் என்னும் ஊரில இறங்கி ஓய்வு எடுத்துக்கொண்டு, சோவியத் தலைமையமைச்சர் புல்கானின் அனுப்பிய வானூர்தியில் ஏறிச்சென்று 7-6-55-இல் மாஸ்கோபோயச் சேர்ந்தார். அங்கு மிகச் சிறப்பான வரவேற்பு நிகழ்ந்தது. செஞ்சேனையின் நன்மதிப்பு அணிவகுப்பு ஏற்பாடாகியிருந்தது; அதைப் பார்வையிட்டார்; மகிழ்ந்தார். நேரு இறங்கிய வானூர்தி நிலையத்திலிருந்து புறப்படுமுன் இந்திமொழியில் தம் நன்றியறிதலைத் தெரிவித்தார். அப்போது இருநாட்டு உறவும் வலுப்பெறுமென்று தாம் நம்புவதாகக் கூறினார். அவர் மேல்நாட்டுச் செலவு, நம்நாட்டுக்கு ஆக்கத்தையும் சிறப்பையும் தருவதாக.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.